# நம்பிக்கையில்லாத் தீர்மானம் 24 - ந் திகதி விவாதம்

Registered as a Newspaper in Ceylon ★★ விலை சதம் 10

# ஈழநாடு
THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily
(19-9-66) இதழ் 220

பராபவ புரட்டாதி 3 ஜ. ஆகிர் 3 திங்கட்கிழமை

மின்னும் வைரங்களுக்கும்
தங்கப்பவுன் நகைகளுக்கும்
AKS
போன் 519
நகை மாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

கொழும்பு, ஞாயிறு
தொடம்பே முதலாளி மரணத்தில் கைமோசக் கொலைத் தீர்ப்பு அளிக்கப்பட்டதையொட்டி அரசாங்கத்தின்மீது எதிர்க்கட்சியினர் கொண்டுவரும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஜனப்பிரதிநிதிகள் சபையில் இம்மாதம் 23-ம், 24-ந் திகதிகளில் விவாதிக்கப்படும்.

தொடம்பே முதலாளியின் விசாரணையின்போது நடைபெற்ற சட்ட விரோதச் செயல்களும், அக்கிரமங்களும் அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டும் அவற்றையிட்டு அது முற்றிலும் கொடூரமான, கவலையீனமான நிலையை மேற்கொண்டுள்ளதை அரசாங்கத்தைக் கண்டிக்கிறது இத் தீர்மானம்.

(5-ம் பக்கம் பார்க்க)

# அமைச்சர் சபை கலைத்ததற்கு தனிப்பட்ட காரணம் இருந்தது

## யாழ். மாநகரசபை கலைப்பு ஆட்சேப வழக்கில் வாதம்

கொழும்பு, ஞாயிறு
"திரு. அல்பிரட் துரையப்பா யாழ்ப்பாண நகரின் மேயராகத் தெரிவுசெய்யப்பட்டவுடன் உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் தமது சக அமைச்சரான சுகாதார அமைச்சர் மூலம் திருமதி (டாக்டர்) துரையப்பாவை இடமாற்றம் செய்வித்தார் திருமதி (டாக்டர்) துரையப்பா தந்தி மூலம் யாழ்ப்பாணத்திலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டார்.'

யாழ். மாநகரசபையை கலைத்ததை ஆட்சேபித்து உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் மீது யாழ்ப்பாணம் முன்னாள் மேயர் திரு. அல்பிரட் துரையப்பாவினால் தொடரப்பட்ட வழக்கு இன்று சுப்ரீம்கோர்ட்டில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டபோது திரு. துரையப்பா சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. சி. தியாகலிங்கம் கியூ சி மேற்கண்டவாறு எடுத்துக் கூறினார்.

திரு. தியாகலிங்கம் மேலும் கூறியதாவது:
இவ்வித செயல் [illegible] திருச்செல்வம் அப்போது மேயராகவிருந்த திரு துரையப்பா மீது கொண்டிருந்த வெறுப்பை எடுத்துக்காட்டுகிறது. திருமதி (டாக்டர்) துரையப்பா, யாழ். மாநகர சபையில் கடமையாற்றுவதாகக்கூறியே திரு. திருச்செல்வம் இடமாற்றம்செய்யக்கோரியிருந்தார். இந்த

(8-ம் பக்கம் பார்க்க)

# 2 மாத அவகாசம்

## சிறுபான்மைத் தமிழர் அறிவிப்பு

— நமது நிருபர் கா. யோகநாதன் —

யாழ்ப்பாணம், திங்கள்
"இவ்வருட[ம்] நவம்பர் மாதம் 18-ந் [திகதி]க்குள் தமிழ்த்தலைவர்கள், [பெ]ரும்பான்மை தமிழ்மக்களின் [ஆ]தரவைப்பெற்று, சமூக ஏற்றத்தாழ்வை நீக்காவிட்டால் அதே தினம் எந்த இடத்திலும் சத்தியாக்கிரகமோ அல்லது உண்ணாவிரதமோ ஆரம்பிப்போம்.'

அச்சுவேலியில் நேற்றுக் காலை நடைபெற்ற சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியினரின் கூட்டத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் மத்தியில் மேற்கண்ட பிரகடனம் பலத்த கரகோஷங்களுக்கிடையே வெளியிடப்பட்டது.

அச்சுவேலி மாவிட்டபுரம் [illegible] திரு வி. கதிர்வேலு தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஏராளமான பெண்களும் கலந்து

(8-ம் பக்கம் பார்க்க)

# வித்துவான் வேந்தனார் காலமானார்

யாழ்ப்பாணம், திங்கள்
ஈழத்துத் தமிழ் அறிஞர்களில் ஒருவரான வித்துவான் க. வேந்தனார் நேற்று மாரடைப்பால் காலமானார்.
சிறந்த மேடைப்பேச்சாளர்களில் ஒருவரும், எழுத்தாளரும், நூலாசிரியருமான வித்துவான் வேந்தனார் பரமேஸ்வரக் கல்லூரியின் தமிழ் விரிவுரையாளராகக் கடமையாற்றினார்.

# எஸ். ஜே. வி. கடிதம்

யாழ்ப்பாணம், திங்.
"இந்த நிலையில் சத்தியாக்கிரகம் செய்வதை நான் ஆதரிக்க விரும்பவில்லை" என்று தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே வி செல்வநாயகம். சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியினருக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் தெரிவித்துள்ளார். இக் கடிதம் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் வாசிக்கப்பட்டது.

### திடீரென வந்தார்

பல்கேரியா செல்லவிருந்த சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி இணைச் செயலாளர் திரு. எம். சி. சுப்பிரமணியம், அச்சுவேலியில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டார்.
பல்கேரியா மாநாடு பின்போடப்பட்டதால், பம்பாய் வரை சென்ற திரு சுப்பிரமணியம், அங்கிருந்து நேற்றுக் காலை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

# அரசாங்கத்தின் பதிலடி

கொழும்பு, ஞாயிறு
தொடம்பே முதலாளியின் மரணம் சம்பந்தமாக பார்லிமெண்டின் ஒத்திவைப்பு நேரத்தில் விவாதிப்பதற்காக எதிர்க்கட்சியினர் இன்று மேற்கொண்ட முயற்சிகள் அரசாங்கத்தின் பதிலடி நடவடிக்கைகளினால் இன்று தவிடுபொடியாகின.

இன்று நடைபெற்ற பார்லிமெண்ட் கூட்டத்தில் தொடம்பே முதலாளியின் மரணம் சம்பந்தமாக காரசாரமாக விவாதிப்பதற்கு எதிர்க்கட்சியினர் திட்டமிட்டிருந்தனர். ஆனால் அரசாங்கத்தின் நடவடிக்கைகளினால் சபையில் கோரமில்லாது போகவே இந்த முயற்சியை கைவிடவேண்டிய நிலை எதிர்க்கட்சியினருக்கு ஏற்பட்டது.

தொடம்பே முதலாளி மரணம்காரணமாக நேற்று

(8ம் பக்கம் பார்க்க)

# மந்திரி தகநாயகா யாழ். விஜயம் ரத்து

யாழ்ப்பாணம், திங்.
யாழ்ப்பாணத்திற்கு 28-ம் திகதி விஜயம்செய்யவிருந்த உள்நாட்டு அமைச்சர் டாக்டர் டபிள்யூ. தகநாயகா வைத்திய அதிகாரிகளின் ஆலோசனையின்படி வரமாட்டார் எனவும். அவர் தமது நிகழ்ச்சிகளை ரத்துச் செய்துள்ளார் எனவும் தெரியவருகிறது.

உள்நாட்டு அமைச்சர் சுகயீனம் காரணமாக தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட வைபவங்களில் விமான நிலைய வரவேற்பு வைபவம் நடைபெற மாட்டாதென்றும்; உள்நாட்டமைச்சர் திறந்துவைக்கவிருந்த நெசவு நிலையவைபவத்தையும், புகையிரத நிலைய கடைவைதிறப்பு விழா வைபவத்தையும் யாழ். அரசாங்க அதிபர் திறந்து வைப்பார் எனவும் தெரியவருகிறது.

நியூயோர்க், செப்19
நாளை ஆரம்பமாகும் ஐ நா. மகாசபையின் கூட்ட நிகழ்ச்சி நிரலில் வியட்னாம் பிரச்னை இடம்பெறவில்லையென அறிவிக்கப்பட்டது.

ஜவுளி வர்த்தகர்களுக்கோர்
நற்செய்தி
கூட்டுறவு ஸ்தாபனம் (C.W.E.) தங்கள் பிடவைகளை விற்பனை செய்வதற்கு எம்மை ஒரு
பிரதான மொத்த விற்பனையாளர்களாக
நியமித்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.
C. W. E. ஸ்தாபனத்தாரின் பிடவைகளை கொள்வனவு செய்வதற்கு எம்முடன் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.
ஆ. அப்பையா அன் கோ.,
(C. W. E. பிரதான மொத்த விற்பனையாளர்கள்)
82, காங்கேசன்துறை வீதி — யாழ்ப்பாணம்.
கிளை: 54, பெரியகடை, — யாழ்ப்பாணம்.
போன்: 506

# 'அட்டோர்னி ஜெனரல் மீது நம்பிக்கையில்லை'

## சதி வழக்கில் எதிர்தரப்பு வழக்கறிஞர்

கொழும்பு, ஞாயிறு
தொடம்பே முதலாளியின் கொலை சம்பந்தமாக ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவை சம்பந்தப்படுத்திப் பேசுவதிலும் பார்க்க இது சம்பந்தமாக வேறொரு வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என நேற்று முடிக்குரிய வழக்கறிஞர் திரு. வேக்லி போல் தெரிவித்திருந்ததற்கு எதிர்தரப்பு வழக்கறிஞர் திரு. மக்கம் பெரேரா இன்று ஆட்சேபம் தெரிவித்தார்.

சதி வழக்கு விசாரணை [illegible] திரு. பெரேரா இவ்வாறு கூறினார்.

அட்டோர்னி ஜெனரல் ராஜினாமாச் செய்வதாக இருந்தால் தாமே அவ்விதம் செய்வதாக திரு. பெரேரா மேலும் தெரிவித்தார். தமக்கு நீதிபரிபாலனசபையில் நம்பிக்கை இருப்பதாகவும் ஆனால் அட்டோர்னிஜெனரலிடம் நம்பிக்கையில்லை எனவும் அவர் கூறினார்.

வியாங்கொடையைச் சேர்ந்த கார்ச் சாரதி திரு. பி. கில்பேர்ட் இன்று சாட்சியமளித்தார்.

# பட்டப்பகலில் துணிகரத் திருட்டு

கொழும்பு, ஞாயிறு
கைத்துப்பாக்கி போன்ற சில பயங்கர ஆயுதங்களுடன் ஒரு கொள்ளைக் கோஷ்டி புறக்கோட்டை பிரதான வீதியிலுள்ள நகை மாளிகை ஒன்றில் நுழைந்து 90,000 ரூபாய் பெறுமதியான நகைகளையும், ரொக்கப் பணத்தையும் அபேஸ் செய்த துணிகரச் சம்பவம் இன்று காலையில் இங்கு நிகழ்ந்துள்ளது.

நகைக்கடையைத் திறப்பதற்காக கடைச் சிப்பந்திகள் ஈடுபட்டுக்கொண்டிருந்த நேரத்தில் இக் கொள்ளைக் கோஷ்டியினர் தந்திரமாக உள்ளே நுழைந்து தங்களது கைவரிசையைக் காட்டிவிட்டனராம்.
நான்கு பேர் கொண்ட இக் கொள்ளைக்கோஷ்டியினர் ஒரு டாக்ஸியில் மறைந்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது.

டாக்ஸி சாரதி விசாரணை செய்யப்பட்டார். சந்தேகத்தின் மீது இருவர் இன்று பகல் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### தேவை

டிராக்டர் சாரதிகள்

டிராக்டர் சாரதிகள் தேவை. இவர்களுக்கு இவர்கள் செய்யும் வேலை அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும். பிணைப் பணம் செலுத்தவேண்டும். இருவர் அத்தாட்சிப் படுத்துபவர்களால் அறிமுகப்படுத்தி சிபார்சு செய்ய வேண்டும். கே. சண்முகம், 135, மீதோட்டமுல்லவீதி, வெல்லம்பிட்டி என்ற விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும். 1268

### விற்பனைக்கு

லாரி ரயர்

லாரி ரயர் 5.60 × 15 விற்பனைக்குண்டு. தயவு செய்து N. சிதம்பரநாதன், அராலி மேற்கு வட்டுக்கோட்டை என்ற விலாசத்திற்கு தொடர்புகொள்ளவும். 1115

வெள்ளை இரும்பு

வள்ளங்களுக்கு (லோன்ச்) உபயோகிக்கக் கூடிய "சாவ்ட்" வெள்ளை இரும்பு 8 அடி நீளம் 2 இஞ்சி கனம். விற்பனைக்குண்டு. பவான் ஸ்ரோஸ், 168, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1269

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, சேத்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்தியவர்கள் அடங்கிய ... னோக் இனும், மந்திரிமார் மற்றும் பிரமுகர்களும் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் ஐ பூரணானந்தர், J. P. கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.


# 250 பேர் முக்கால் மணிநேரம் கியூவில்நின்ற காட்சி

யாழ்ப்பாணம், திங்கள்

ஒரே பஸ் கியூவில் சுமார் 250 பிரயாணிகள் 40 நிமிடங்களாககாத்து நின்றனர். இக்காட்சியை, நேற்று முன்தினம் மாலை 5 மணிக்கு யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் காணக்கூடியதாகவிருந்தது.

சாவகச்சேரி - கொடிகாமம் பஸ் கியூவில், பெண்கள் குழந்தைகள் உட்பட சுமார் 250 பிரயாணிகள் காத்து நின்றனர். மாலை 5 மணிமுதல் 5-40 மணிவரை பஸ் இல்லாததுதான் காரணம்.

கடைசியாக மாலை 5-40 மணிக்கு ஒரே சமயத்தில் 3 இரட்டைத்தட்டு பஸ்கள் வந்தன. கியூவில் நின்றபிரயாணிகள் ஏறிக்கொண்டனர். மிகுதியாகநின்ற பிரயாணிகள் தருமபுரம் பஸ்ஸில் ஏறிக் கொண்டனர்.

பிரயாணிகள் வசதிப்படி விரைவில் நேர அட்டவணை மாற்றியமைக்கப்படுமென்றும், தமது நிருபரிடம் பஸ் டிப்போ அதிகாரியொருவர் தெரிவித்தார்.

# அண்ணனின் திருமணவிழாவைக் காத்திருந்த தம்பியின் பிணக்கோலம்

## கிளிநொச்சியில் பரிதாப சம்பவம்

கிளிநொச்சி, ஞாயிறு

அண்ணனின் திருமண விழாவைக் கண்ணாரக்கண்டு களிக்கஇருந்த தம்பியின் மரணத்தைக் கண்டு கதறினான் அண்ணன். இச்சம்பவம் கிளிநொச்சியைச் சேர்ந்த கனகபுரம் என்னும் கிராமத்தில் நடைபெற்றது. பருத்தித்துறையைச்சேர்ந்த புலோலி என்னும் கிராமத்தை சொந்த ஊராகக் கொண்டவரும் யாழ்ப்பாணம் ஐக்கிய மாகாண வங்கியில் வேலை பார்ப்பவருமாகிய சிதம்பரப்பிள்ளை (வயது 26) என்னும் இளைஞரே இந்த அகால மரணத்துக்குள்ளானவர்.

தனது தமையனுயின் திருமணத்துக்கு ஏற்ற ஒழுங்குகள் ... வயும்செய்துமுடித்துவிட்டு இரவு படுக்கைக்குச்சென்றவர் பின் எழுந்திருக்கவேயில்லை! தாயார் அதிகாலை மகனை எழுப்பச்சென்றார், மகனின் உடல்குளிர்ந்தபடியிருக்கக்கண்டு தனது மூத்த மகனை எழுப்பி தம்பியாரைப் பார்க்கும்படி கூறவே தமையன் தம்பியார் இறந்திருக்கக்கண்டு அதிர்ச்சியடைந்து போனார்.

இம்மரணம் சம்பந்தமாக கிளிநொச்சி திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. மூ. யோகலிங்கம் மரணவிசாரணை நடாத்தினார்.

கிளிநொச்சி வைத்திய அதிகாரி பிரேதபரிசோதனை நடாத்தியபின்னர் இருதயம் நின்றதினால் ஏற்பட்ட இயற்கை மரணமெனத்தீர்ப்பளிக்கப்பட்டது.


REGAL—JAFFNA

NOW SHOWING

BRIGITTE BAR...

in

The W...rior's Rest

(Fans...-Color) (Adults only)

மகாத்மா தியேட்டர்

(தெல்லிப்பழை)

தினசரி 6-30—9-30

அஷோக்குமார் நடித்த

Mr. "X" in Bombay

குலுங்கக் குலுங்கச் சிரிக்கவைக்கும் படம்

ராஜா

(யாழ்ப்பாணம்)

தினசரி 2-30, 6-30, 9-45

விடுமுறை தினங்களில் 4 காட்சிகள்

எம்.ஜி.ஆர். - ஈ.வி. சரோஜா நடித்த

கொடுத்துவைத்தவள்

நியூ காலிங்கன்

(இணுவில்)

தினசரி 6-30, 9-30 மணி

விடுமுறை தினங்களில் 2-30 மணி

எம். ஜி. ஆர். - சரோஜாதேவி நடித்த

தெய்வத்தாய்

கடைசி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) | பிளாஸா (வெள்ளவத்தை) | நவா (கொம்பனித்தெரு)

விஜிதா (ஹட்டன்) | விஜயா (மட்டக்களப்பு) | ஸ்ரீகிருஷ்ணா (திருமலை)

மொடேர்ண் (பண்டாரவளை) | வெலிங்டன் (சுதந்திரனம்)



சிவாஜி - எஸ்.எஸ்.ஆர். பாலையா, ராதா, முத்துராமன், ஸ்ரீராம், நாகேஷ், தேவிகா, புஷ்பலதா மற்றும் பலர்நடிக்கும் பாரத மாதா பிக்சர்ஸ்

# பழநி

இசை: விஸ்வநாதன் - ராமமூர்த்தி

திரைக்கதை-டைரக்ஷன்: பீம்சிங்


## வானொலி

### கொழும்பு

திங்கள் 19-9-66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

844 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

844 மீட்டர் & 49 மீட்டர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

844 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15படத்திவிருந்து.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 இசைக்கச்சேரி — சரஸ்வதி பாக்கியராசா, 7-45 கலைக்கோலம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வாத்தியஇசை, 9-30 காசநோய் கொடித்தின வேண்டுகோள், 9-45 ... ன் விருப்பம்.


## விளம்பரம்

### மனேச்சர் தேவை

சுருவில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

i. தகுதி

அ. வயது 20—45

ஆ. க. பொ. த. பத்திரம் உடையவர்களும் சங்க அனுபவம் உடையவர்களும் விண்ணப்பிக்கலாம். ஆனால் கூட்டுறவுப் பயிற்சி முக்கியமாகக் கவனிக்கப்படும்.

ii. சம்பளம் ரூபா 90/- முதல் 125/- வரை (சகலபடிகளும் உட்பட) தகைமைக்கேற்ப கொடுக்கப்படும்.

iii. பிணை ரொக்கம் ரூபா 2000/- இரண்டாயிரம். ஆதனம்ரூபா 3000/-

iv. குடிஇருப்புக்கு வீட்டு வசதி அளிக்கப்படும்.

v, விண்ணப்ப முடிவுநாள் 30-9-66.

விண்ணப்பிக்கும் விலாசம்.

கௌரவ காரியதரிசி

சுருவில் ப. நோ. கூ. சங்கம், ஊர்காவற்றுறை. 981

### வல்வெட்டித்துறை பட்டினசபை

நிரந்தரமான, இளைப்பாறுச் சம்பளமற்ற காவற்காரர் பதவி.

1. மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
2. வேதன அடிப்படை வருடாந்தம் ரூபா 540-30 8-24 1 ரூபா. 804 வருடாந்தம். ரூபா 732 பெற முன் விவேகத்திறமைக்கான தடைப் பரீட்சைகள் உண்டு.
3. வேண்டியதகைமைகள்: அ. வயது 26-9-66 ல் 20 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்குக் கூடாமலும்இருக்க வேண்டும்.
4. அரசாங்க வர்த்தமானியின் 4 வது பகுதியின் ஆரம்பத்தில் பிரசுரமாகியிருக்கும் உள்ளூராட்சிச் சேவையிலுள்ள பகுதிகளில் நியமனம் செய்வதற்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.
5. நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்டு பிரசுரமாகியிருக்கும் பத்திரத்தில் கண்டவாறு விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 26-9-66-ம் திகதிக்குப் பிந்தாமல் வல்வெட்டித்துறைபட்டினசபைத் தலைவருக்குக் கிடைக்கும்படி அனுப்பப்படல் வேண்டும்.
6. விண்ணப்பங்கள் அனைத்தும் கிடைக்கப்பெற்றவுடன் அறிவிக்கப்படும். முடிவு திகதியின் பின் மூன்று நாட்களுக்குள் விண்ணப்பம் கிடைத்தமை பற்றி அறிவித்தல் கிடைக்கப்பெறாத எந்த ஒரு விண்ணப்பதாரரும் உடனடியாகவே வல்வெட்டித்துறை பட்டினசபைத் தலைவருக்குத் தெரியப்படுத்தவேண்டும். இந்த ஏற்பாட்டிற்கிணங்க நடக்கத் தவறின் கருத்துக்கெடுக்கும் கோரிக்கையை விண்ணப்பதாரர் இழக்கவேண்டியுள்ளது.

வி. இரத்தினவடிவேல்,

தலைவர்,

பட்டினசபை,

வல்வெட்டித்துறை.

வல்வெட்டித்துறை பட்டினசபை அலுவலகம்,

1966 ஹு செப்டம்பர் மீ 17-ம் உ 963

### அறிவித்தல்

யாழ்ப்பாணம் (பெரியகடை) உப-மின்நிலையத்தினால் பயனடையும் மின்பாவனையாளர்களுக்கு!

மேற்படி மின்நிலையத்தில் அவசிய வேலைகள் செய்ய வேண்டியிருப்பதால் 1966-ம் ஆண்டுசெப்டம்பர் 21-ம் திகதி புதன்கிழமை காலை 8-00 மணியிலிருந்து மாலை 4 மணிவரை மின்விநியோகம் தடைப்படுமென்று அரசாங்க மின்சாரப் பகுதியினர் (யாழ்ப்பாணம்) அறிவித்துள்ளதைப் பொது மக்களுக்கு இதனால் தெரியப்படுத்துகிறேன். யாழ்ப்பாணம் பெரியகடையிலுள்ள மின்நிலையத்தினால் பயனடைவோர் தயவு செய்து அவதானிக்கவும்.

கட்சன் செல்வராசா

மாநகர ஆணையாளர்.

மாநகர அலுவலகம்.

யாழ்ப்பாணம்.

17-9-1966. 980


## சீனக் குற்றச்சாட்டை அமெரிக்கா ஆராய்கிறது

வாஷிங்டன், செப். 18

செப்டம்பர் 9ம் திகதி சீனக்கிராமங்களை அமெரிக்க எப்105ஜெய்ட் விமானங்கள் தாக்கியதாகவும், சீனவிமானங்கள் அவற்றைஎதிர்த்துப் போராடியதாகவும் சீனாகுற்றஞ்சாட்டியுள்ளதை அமெரிக்கா ஆராய்ந்துவருவதாக பாதுகாப்புமந்திரி திரு. மக்னமாரா இங்கு தெரிவித்தார்.

சம்பவம்நடைபெற்றதாக கூறப்படும் தினத்துக்கு அடுத்தநாள் சீன எல்லைக்கு 30 மைல் தெற்கேகொம்யூனிஸ் எம்.ஜி. விமானங்களை அமெரிக்க விமானிகள் சந்தித்ததாக சைகோனில்அறிவிக்கப்பட்டது என்றும்திரு. மக்னமாரா கூறினார்.

எங்களுக்குக் கிடைத்ததகவல் இதுதான். ஆனாலும் ஏதாவது பிழை நடந்திருக்குமோவென்பதைத் தெளிவுபடுத்த நாம் இவ்விவகாரத்தை ஆராய்ந்துவருகிறோம் என்றார் அவர். (பி டி. ஸி.)

## உடுகம நிதி

கொழும்பு ஞாயிறு

சதிவழக்கில் சம்பந்தப்பட்டதாகக் கருதப்படும் மேஜர் உடுகமவிற்கு பண உதவி அளிக்கும் நோக்கமாக கண்டியிலுள்ள பல பிரமுகர்கள் உடுகம நிதி யொன்றை ஆரம்பித்துள்ளார்கள்.

## விவசாய குழு அங்குரார்ப்பணம்

நெடுந்தீவு, ஞாயிறு

நெடுந்தீவின் விவசாயக் குழு அங்குரார்ப்பணக் கூட்டம் நெடுந்தீவு காரியாதிகாரி கந்தோரில் காரியாதிகாரி திரு. எம். சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. தலைவர் தமது தலைமை உரையில் நெடுந்தீவுக்கு ஒரு விவசாயக்குழு மிகஅவசியம் என்றும் திறமையான விவசாயிகள் இங்கிருந்தும் அவர்களை சரியானபாதையில் வழிநடத்தினால் பெரும்பலனை அடையலாம் எனவும் கூறினார்.

கூட்டத்திற்கு விவசாய அபிவிருத்தி அதிகாரி, கூட்டுறவுப் பரிசோதகர், விவசாய அபிவிருத்தி ஓவசியர், கிராமசேவகர்கள், விவசாயிகள் ஆகியோர் சமூகமளித்திருந்தனர்.


வியாபாரம் பெருக

விளம்பரம்செய்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளை ஆரம்பமாகும் ஐ.நா. மகாசபைக்கூட்டம்

## சீனவை சேர்ப்பதற்கு அமெரிக்கா தொடர்ந்து எதிர்ப்பு?

நியுயோர்க், செப்டம்பர் 19

நாளை ஆரம்பமாகும் ஐ. நா. பொதுச்சபையின் 21-வது கூட்டத்தொடரில் சீனவை ஐ. நா. வில் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்ற கருத்துக்கு அமெரிக்கா தனது பலத்த எதிர்ப்பைத் தெரிவித்துக்கொள்ளும் என ஐ. நா. வட்டாரங்கள் கருதுகின்றன.

இந்தியா, பாகிஸ்தான், இலங்கை போன்ற நாடுகள் சீனவை ஐ. நா. வில் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்ற தமது கொள்கையை வலியுறுத்திவந்துள்ளன. ஆனல் அமெரிக்கா சீனவைச்சேர்த்துக்கொள்ளக் கூடாதென்ற தனது கொள்கை சிறிதும் மாற்றிக்கொள்ளவில்லை என அடிக்கடி கூறிக்கொண்டுவந்தது. ஆயினும் 21-வது ஐ. நா. பொதுச்சபை கூட்டத்தில் தனதுகொள்கையை மாற்றுமெனப் பல நாடுகளும் எதிர்பார்த்திருந்தன. ஆனல் அமெரிக்கா அந்தக் கொள்கையைத்தான்பொது சபைக்கூட்டத்திலும் வலியுறுத்தப் போகிறதென இங்கிருந்து கிடைத்த செய்திகள் கூறுகின்றன.

### டீன் ரஸ்க் கருத்து

ஐக்கிய நாட்டுக் காரியதரிசி திரு. டீன்ரஸ்க் இந்தக் கருத்தை நேற்று முன்தினம் இங்கு நடந்த பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்திருக்கிருர்.

''சீனவை ஐ. நா.வில் சேர்த்துக்கொள்வதற்கு அமெரிக்கா தனது முழு எதிர்ப்பையும் ஐ. நா. சபை கூட்டத்தில் தெரிவிக்கும்'' என்று அவர் கூறியுள்ளார். சீன பற்றி அமெரிக்கா வைத்திருந்த எண்ணத்திலோ, கொள்கையிலோ எவ்வித மாற்றமுமில்லையென்றும் அவர் தெரிவித்துள்[illegible]

### சீன ஒரு தான்தோன்றி!

'சீனவை ஐ. நா. சபையில் சேர்க்கக்கூடாதென்று இம்முறை வலியுறுத்தப் போவதற்கான காரணம், சீன தனது கொள்கையில் இன்னமும் சிறிதளவும்மாற்றிக்கொள்ளாததுதான். விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை சீனவுக்கிடையாது. தீமை விளைவிக்கும் தான்தோன்றித்தனமான குழப்பநிலையை அடக்கிக்கொண்டிருக்கும் நாடுதான் சீன. அந்த சீனவை எப்படி ஐ. நா. வில் சேர்த்துக் கொள்வது?' என்று திரு. டீன்ரஸ்க் கூறினர். தமது இந்தக் கொள்கைக்குப் பல நாடுகள் ஆதரவுதரும் என்பதில் சந்தேகமில்லை என்றும் அவர் தெரிவித்திருக்கிருர்.

## இந்தோனேஷியா பார்வையாளரை அனுப்பும்

ஜாகார்த்தா, செப். 18

ஐ. நா.மகாசபை பொதுக் கூட்டத்தில கலந்துகொள்வதற்கு இந்தோனேஷியா பார்வையாளர்களை அனுப்பவிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

இந்தோனேஷிய மந்திரி சபைத்தலைவரும், ராணுவத்தலைவருமான திரு. சுகார்டோ இந்த முடிவைச் செய்தார். இந்த முடிவை அவர் தெரிவிக்கும்போது பக்கத்தில் இந்தோனேஷியா அதிபர் சுகர்ணேவுமிருந்தார். திரு. சுகார்டோ இதனைத் தெரிவிக்கும்போதுசுகர்ணே மௌனம் சாதித்துக்கொண்டிருந்தார்.

ஐ. நா. மகா சபையின் கடந்த கூட்டத்தில் இந்தோனேஷிய - மலேசியா எதிர்ப்புக்கொள்கை சம்பந்தமாக ஏற்பட்ட வேற்றுமை காரணமாக ஐ. நா. மகா சபையிலிருந்து வெளியேறிக்கொண்டது.

## யுதாண்ட் தொடர்ந்து பதவி வகிக்க சம்மதிக்கலாம்?

நியுயோர்க், செப். 18

ஐக்கிய நாடுகள் சபை பொதுக்காரியதரிசி திரு. யுதாண்ட் தொடர்ந்து இரு வருடங்களுக்குப் பதவிவகிக்கக்கூடிய அறிகுறிகள் தென்படுவதாக ஐ. நா. வட்டாரங்களிலிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

நவம்பர் 3-ம் திகதி பதவியிலிருந்து விலகப்போவதாக திரு. யுதாண்ட் அறிவித்திருந்தபோதிலும், அவரைத் தொடர்ந்து பதவிவகிக்கச் செய்யும் சமரச முயற்சிகள் வெற்றியளிக்குமென்றே தெரிகிறது. பல நாடுகள் தொடர்ந்து பதவிவகிக்கும்படி யுதாண்டிடம் வேண்டியிருந்தன. பல நாட்டுத் தலைவர்கள் அவரைத் தனிப்பட்டமுறையில் சந்தித்து ஐ. நா. சபைப் பொதுக் காரியதரிசியாகத் தொடர்ந்து இருக்கும்படி வற்புறுத்திக்கொண்டனர்.

திரு. யுதாண்ட் தனது முடிவுசம்பந்தமாக பலநாட்டுத் தலைவர்களுடனும் ராஜதந்திரிகளுடனும் ஆலோசனை செய்துவருகிருர். பலருடைய வற்புறுத்தலுக்கிணங்கி தொடர்ந்து கடமையாற்ற இணங்குவாரோ தனது முடிவை மாற்றிக்கொள்வாரென ஐ. நா. வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.

## கொழும்புத் திட்டத்தில் பயிற்சிபெற லண்டன் செல்லும் இலங்கையர்!

லண்டன், செப். 18

கொழும்புத் திட்டத்தின் தொழில் நுட்பக் கூட்டுறவு பயிற்சி ஏற்பாட்டின் கீழ் பல்வேறு துறைகளில் பயிற்சி பெறுவதற்காக பிரிட்டன் செல்லும் இலங்கையர்களின் தொகை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இம்மாத தொடக்கத்தில் நான்கு இலங்கையர்கள் பிரிட்டன் போய்ச் சேர்ந்திருக்கிருர்கள். இன்னுமொருவர் அடுத்தவாரம் விமானமூலம்லண்டன் செல்லவிருக்கிருர்.

திரு. சி. புஷ்பரெத்தினம், திரு. வி. சேனுதிராசா, திரு. பி. பி. வீரசிங்க, திரு. ஜே. ஏ. டி. ஜி. ஜெயசிங்கா, ஆகியோரே இந்நால்வருமாவர். இலங்கை சர்வகலாசாலையின் ரசாயனப்பிரிவில் சிரேஷ்ட ஆய்வுகூடதனிபாளராக கடமையாற்றிவந்த திரு. சி. புஷ்பரெத்தினம் ரசாயன ஆய்வுகூட தொழில்நுட்பத்துறையில் பயிற்சிபெறுவார். லண்டனிலுள்ள படிங்ரன் தொழில் நுட்பக் கல்லூரியிலும், லண்டன் சர்வகலாசாலையிலும் சுமார் மூன்றுவருடகாலம் பயிற்சிபெறுவார்.

நீர்கொழும்பு நகரசபையில் சிரேஷ்ட சுகாதார பரிசோதகராகக் கடமையாற்றிய திரு. பி. பி. வீரசிங்க லண்டன் பொதுசுகாதார ராயல் நிறுவனத்தில் சூழல் சுகாதார துறையில் பயில்வார். இலங்கை அரசாங்க ரயில்வேயை சேர்ந்த திரு. ஜே. ஏ. டி. ஜி. ஜெயசிங்கா, கல்லோயா அபிவிருத்தி சபையைச் சேர்ந்த திரு. வி. சேனுதிராசா ஆகிய இரு தொழில்நுட்பவியலாளரும் பிரிட்டிஷ் நெஸ்நாட்டு அபிவிருத்தி அமைச்சு ஒழுங்கு செய்துள்ள தொழில்சங்க பயிற்சிவகுப்புகளில் பங்குபற்றுவார்கள்.

இம்மாதம் 27ந் திகதி பிரிட்டன் போய்ச் சேரவிருக்கும் அரசாங்க ரசாயன பகுப்பாளராகிய திரு. எம். ஜெயரெத்தினம் நஞ்சூட்டாய்வு [illegible] உயர்பயிற்சி பெறுவார்.

### மாபுநோய்கள்

### லண்டன் மகாநாட்டில் இலங்கை பங்குபற்றும்

லண்டன், செப். 18

மார்பு இருதய நோய்கள் சம்பந்தமாக அடுத்த வருடம் ஏப்ரல் மாதத்தில்பிரிட்டனில் சர்வதேச மகாநாடு ஒன்று நடைபெறவிருக்கிறது. இலங்கையும் இம் மகாநாட்டிற்கு பிரதிநிதிகளை அனுப்பவிருக்கிறது.

இம்மகாநாட்டிற்கு சமூகமளிக்குமாறுகோரி உலகெங்கிலுமிருந்துவைத்திய குழுக்கள், சுகாதார மந்திரிகள், பிரதமவைத்திய அதிகாரிகள் முதலானேருக்கு அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டுள்ளன. இம் மகாநாட்டிற்கு சுமார் 1000 பிரதிநிதிகள் சமூகமளிக்கக் கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இம்மாநாடு ஏப்ரல் 4ந் திகதி முதல் 7ம் திகதிவரை தென் இங்கிலாந்திலுள்ள ஈஸ்ட்போர்ன் நகரில் நடைபெறும். மாநாடு, மார்பு இருதய நோய்களை தடுப்பது பற்றியும் இந்நோய்களுக்கு உகந்த சிகிச்சை முறைகள் பற்றியுமே முக்கிய கவனம் செலுத்தும்.

## 42 நாய்களை சுட்டுக் கொன்ருன்

சிட்னி, செப். 18

பத்துவயதுச் சிறுவன் ஒருவனைக்கடித்து துன்புறுத்திய 60 வெறிநாய்களில் 42ஐ ஒரு மனிதன் இங்கு சுட்டுக் கொன்ருன்முகத்திலும், உடம்பிலும் 20 கடிகாயங்களுடன் சிறுவன் ஆஸ்பத்திரியில் [illegible]

(பி.டி.ஐ.)

## தமிழ்நாட்டுச் செய்திகள்

**மரணம்**

அரி ஜனநல இலாகா மாஜி மந்திரியாக இருந்தபரமேசுவரன் மாரடைப்பால் மரணமானுர்.

**போட்டி**

தமிழ்நாட்டில் போட்டியிடும் காங்கிரஸ் அபேட்சகர் பட்டியல் நவம்பர் மாதம் வெளியாகுமென திருபர்கன் வேட்டியின் போது காங்கிரஸ் தலைவர் காமராஜ் அறிவித்தார்.

**நீடிக்கிறது**

ராஜாஜிக்கு தொடர்ந்த காய்ச்சல் நீடிக்கிறது. படுக்கையில் இருந்து வருகிருர்.

**நாடகம்**

பெண்களே முழுவதும் நடிக்கும் நாடகம் ஒன்றை நடிகை சாவித்திரி நடத்த இருக்கிருர்.

**தட்[illegible]**

குழந்தை [illegible]க்கு சென்னையில் தட்[illegible] ஏற்பட்டு இருக்கிறது

**வரலாறு**

காங்கிரஸ்தலைவர் காமராஜின் வாழ்க்கை வரலாறு தமிழ் ஆங்கிலம் ஹிந்தி ஆகிய மும்மொழிகளிலும் புத்தகமாக வெளிவருகிறது.

**சூபர் மார்கெட்டு**

சென்னையில் மாதம் 24 ஆயிரம் வாடகையுள்ள கட்டிடத்தில் சூபர்மார்க்கெட் (அரசாங்கக்கடை) அமைக்கப்படுகிறது.

**கடத்தல் மன்னன்**

சென்னை மத்தியசிறையில் தற்பொழுது இருக்கும் சர்வதேசக்கடத்தல், மன்னன் வால்காம் விரைவில் பம்பாய் சிறைக்கு மாற்றப்படுவார்.

**உண்ணுவிரதம்**

தமிழ்நாடு ஜனசங்கத்தலைவர் உட்பட 33 பேர் விலை உயர்வை எதிர்த்து சென்னையில் உண்ணுவிரதம் இருக்கின்றனர்.

**அடுத்தமேயர்**

நவம்பர் மாதம் நடைபெறும் சென்னை மேயர் தேர்தலில் வன்னியர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவார் எனத் தெரியவருகிறது.

**[illegible]**

[illegible] கொடுப்பதாகச் சொல்லி ரூபா 63 ஆயிரம் மோசடி செய்த சென்னை லட்சாதிபதி ஒருவர் கைது செய்யப்பட்டார்.

## ஸ்ரீமதி இந்திரா வீட்டுக்குள் சுவரேறிக் குதித்தான்!

அலகபாத், செப். 18

அலகாபாத்தில் பிரதமர்இந்திராகாந்தி வீட்டின்பின்புறத்தின் வழியாக சுவரேறிக் குதித்து, அனுமதியின்றி வீட்டுக்குள் நுழைந்ததாக ஒருவன் கைது செய்யப்பட்டான்.

பொலிசார் அவனை விசாரித்து வருகின்றனர். ஆனல் அவனே பிரதமர் இந்திராவைச் சந்தித்து மனுவொன்றைக் கொடுப்பதற்காகத்தான் இப்படியாகச் சென்றதாக பொலிசாரிடம் தெரிவித்துள்ளான்.

## வார்சோ ஒப்பந்த நாடுகளின் இணைப்பு இராணுவ நடவடிக்கை

### பிராக்கில் நடை பெறுகிறது

பிராக், செப். 18

அடுத்தவாரம் நடைபெறவிருக்கும் வார்சோ ஒப்பந்த நாடுகளின் இணைப்பு இராணுவ யுத்தப்பயிற்சி அணிவகுப்பையொட்டி, செக்கோஸ்லோவாக்கியாவினூடாக சோவியத் துருப்புகள் இன்று நகர்ந்துசென்றன.

இன்று ஆரம்பமாகி ஒருவாரம் நீடிக்கும் இந்த அணிவகுப்பில் சோவியத், செக்கோஸ்லோவாக்கியா, ஹங்கேரிய, கிழக்கு ஜெர்மன் துருப்புக்கள் பங்குபற்றும். கொம்யூனிஸ்டுகள் இவ்வணிவகுப்பை இரண்டாவது உலகயுத்தத்தின் பின் ஐரோப்பாவில்நடைபெறும் மிகப்பெரிய அணிவகுப்பு என வர்ணிக்கிருர்கள்.

நேட்டோயுத்த தந்திரோபாய நடவடிக்கைகளுக்கெதிராக இலகுவில் நடவடிக்கை எடுப்பதும், அணுக்குண்டுத் தாக்குதலைச் சமாளிப்பதும் இப்பரீட்சார்த்த இராணுவ நடவடிக்கையின் நோக்கங்களாகும்.

பிராக்கினூடாக ஓடும் ஆற்றின் பெயரை வைத்து 'வ்லாட்டாவா இயக்கம்' என்றழைக்கப்படும் இந்த யுத்த அணிவகுப்புகளுக்கு, வார்சோ ஒப்பந்த துருப்புகளின் சோவியத் தலைவரான மார்ஷல் அண்ட்ரே இரெக்கோவும் சமுகமளிப்பார்.

ஏவுகணைகள் கொண்டு செல்லும் எம். ஜீ. போர் விமானங்கள் தொடக்கம் உள்ளூர் இராணுவத்தினர், மக்கள் துருப்புக்கள் வரை ஐரோப்பாவிலுள்ள முழு கொம்மியூனிச பாதுகாப்பும் இப்பரீட்சைகள் மூலம் பரிசிலனை செய்யப்படும். இப்பரீட்சை இணைப்புக்குக் குறிய வட்ட டெலிவிஷனும் உதவிபுரியும்.

மேற்கு ஜெர்மனிக்கும் அவுஸ்திரேலியாவுக்குமிடையேயுள்ள எல்லையில் இப்பரீட்சார்த்த யுத்த நடவடிக்கைகள் பெரும்பாலும் நடைபெறுமென்ருலும், நடவடிக்கைகளை ஒழுங்கு செய்தவர்கள் இவை ''வய முறுத்தும் வாகிலிசக நடவடிக்கைகள்'' என்பதை மறுத்துள்ளனர். (பி.டி.ஐ.)

### இலங்கை-மாலைதீவு விமான சேவை

கொழும்பு, சனி

இலங்கைக்கும் மாலைதீவுக்குமிடையில் இருமுக விமான போக்குவரத்து சேவையை மேற்கொள்வதற்கான உடன்படிக்கை வெகுவிரைவில் கைச்சாத்தாகவிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

மனிதனின் அந்தரங்க ஆத்மா எவ்வளவு தூரத்திற்குத்தான் வெளிப்பட்டிருக்கிறதோ, அவ்வளவு தூரத்துக்குத்தான் புறத்தோற்றங்களுக்கு மதிப்புண்டு. —மகாத்மா காந்தி

ஈழநாடு

ELANADU National Tamil Daily: Post Box 49 JAFFNA.
Telegrams : EELANADU Jaffna: Telephone : 109

பராபவ ஆண்டு புரட்டாதி 3 19-9-66

## நீதி சாகவில்லை

தொடம்பே முதலாளியின் கொலை பற்றி பாரபட்சமற்ற பூரண விசாரணை நடைபெறுமென்று பிரதமர் வாக்குறுதியளித்திருப்பதும் தொடம்பே முதலாளியின் கொலை பற்றியும் அவருடன் மாண்ட இராணுவ கோர்ப்பரல் திலகவர்த்தனாவின் மரணம் பற்றியும் பாரபட்சமற்ற பூரண விசாரணை நடத்துமபடி பொலிஸ் அதிபரை அட்டர்ணி ஜெனரல் கேட்டிருப்பதும் நீதிபரிபாலனத்தின்மீது நம்பிக்கையை ஏற்படுத்தியிருப்பதுடன் மக்களுக்கு ஆறுதலளிப்பதுமாகும்.

சதிசம்பந்தமான பூர்வாங்க விசாரணையின்போது இரகசியப் பொலிஸ் தலைமைக் காரியாலயக் கட்டிடத்தின் நான்காவது மாடிக்கட்டிடத்திலிருந்து தொடம்பே முதலாளியும் கோர்ப்பரல் திலகவர்த்தனாவும் மாண்டனர். இவர்களின் மரணம் பற்றிய விசாரணைகளின் முடிவில் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. தொடம்பே முதலாளியின் மரணம் பற்றி புதிதாக விசாரணை நடத்தவேண்டுமெனக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுமீது நடைபெற்ற விசாரணையின் பின் தொடம்பே முதலாளியின் மரணம் தற்கொலை அல்லவென்றும் அது ஒரு கொலை என்றும் நீதவான் தீர்ப்பளித்திருக்கிறார். இந்தத் தீர்ப்பு இலங்கையில் உண்மை ஜனநாயகம் இருக்கிறதென்பதையும் நீதிபரிபாலன சேவை சுதந்திரமாக இயங்குகிறதென்பதையும் தெளிவாக்கியுள்ளது. தொடம்பே முதலாளியின் மரணம் மட்டுமல்ல கோர்ப்பரல் திலகவர்த்தனாவின் மரணம் பற்றியும் விசாரணை செய்யவிருப்பது நீதி செத்துவிடவில்லையென்பதைக் காட்டுகிறது.

இந்த விசாரணைகள் ஒருபுறமிருக்க சந்தேகத்தின்மீது பொலிசார் எவரைக் கைது செய்தாலும் அவருக்குப்பாதுகாப்பளிக்க வேண்டுமேயல்லாமல் 'உண்மையை' பெறுவதற்காக மிதமிஞ்சிய நடவடிக்கைகளில் பொலிசார் ஈடுபடக்கூடாது என்பதையும் நீதவான் அளித்த தீர்ப்பு எடுத்துக் காட்டுவதாகவுள்ளது. தொடம்பேமுதலாளியின் மரணம் மட்டுமல்லவேறு பல சம்பவங்களும்பொலிசார் சிலரின் அதிகார துஷ்பிரயோகச் செயலை எடுத்துக் காட்டியிருக்கின்றன. பிரதமரும், பொலிஸ் அதிபரும் ஜனநாயகத்தையும், நீதியையும் பாதுகாப்பதில் இனி விழிப்பாக இருப்பார்களென நம்பலாம்.

## பஸ் சேவை திருந்த ஒரு வழி

கழுதை தேய்ந்து கட்டெறும்பானது என்பார்கள். கழுதை கட்டெறும்பானதோ இல்லையோ, இ. போ. சபை பஸ் வண்டிகள் கட்டெறும்பாவது உண்மை; யாழ்ப்பாண மாவட்டத்தில் நூற்றுக்கு நூறு உண்மை. சுறுசுறுப்புக்குப்பெயர்பெற்ற எறும்புகள் இதை ஆட்சேபிக்கலாம் இலங்கைப்போக்குவரத்துச்சபையினர் ஆட்சேபிக்கமுடியாது. சிறீ பஸ்கள் வந்தால் வடமாகாணத்தில் பஸ் பற்றுக்குறை நீங்கி, பிரயாணிகளின் கவலை ஒழிந்துவிடும் என்றார்கள். இரட்டைத் தட்டுபஸ்கள் வந்ததும் யாழ்ப்பாணத்தில் மக்கள் நடந்து செல்லவேண்டியதில்லை என்றும் சிலர் சொன்னார்கள். சிறீ பஸ்களும் வந்தன; இரட்டைத்தட்டு பஸ்களும் மேளதாளத்துடன் வந்து சேர்ந்தன ஆனால், பிரயாணிகளின் கஷ்டம் நீங்கவில்லை; நீங்காதது மட்டுமல்ல வரவர நிலைமை மோசமாகிவருகிறது. பிரயாணிகள் சங்கம் பார்லிமெண்ட் பிரதிநிதிகள் எல்லோருமபுகார்செய்துவிட்டனர் பஸ் சேவை சீரடையவில்லை.

தேவையான பஸ்கள் அனுப்பப்பட்டுவிட்டன என்று இ. போ. சபை தலைமைக் காரியாலயத்தினர் தெரிவித்தனர். இப்பகுதி மக்களின் தேவையைப் பூர்த்திசெய்வதற்கு இன்னும் பஸ்கள் தேவையென்று இங்குள்ளோர் கூறுகின்றனர். இங்கு இருப்பவைகளில் ஒரு சில பஸ்களைத் தவிர மற்றும் சில பஸ்கள் யாவும் 'டிப்போ'வை விட்டு வெளிவரமுடியாதவை; மற்றும் சிலபஸ்கள் பாதி வழியில் பிரயாணிகளைத் தவிக்கவிட்டு பாதையிலேயே படுத்துறங்கிவிடுவன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பிரயாணிகளின் குறை என்று தீரும்; பஸ் சேவை என்று திருந்தும்?

எம்.பி.க்களுக்கும், அரசாங்க அதிகாரிகளுக்கும் மோட்டார்கார் வாங்குவதற்கு அனுமதியளிக்காது இ. போ. சபை அதிகாரிகளுட்பட அனைவரும் பஸ்களில் பிரயாணம் செய்யவேண்டும். அப்படியொரு நிலை ஏற்பட்டால் பஸ்சேவை திருந்தலாம் என்று எதிர்பார்க்கலாமா?

## இந்தோனேஷிய அதிகாரிகள் குழு

### பாரதம் வந்தது

புதுடில்லி, செப். 18

இந்தோனேஷியாவிலிருந்து பத்துப்பேர் கொண்ட அதிகாரிகள்குழுவொன்று இன்று காலை புதுடில்லி வந்தது. பாரதம் இந்தோனேஷியாவுக்கு பத்துக்கோடி ரூபாய் கடனுதவி அளிப்பதாகச் செய்யப்பட்ட உறுதி சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்துவதற்காகவே இக்குழு இங்கு வந்துள்ளது. இந்தோனேஷிய துணைப் பிரதமர் சுல்தான் இம்மாதம் 21-ந் திகதி இங்கு வந்த பின்னரே பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகுமெனத் தெரிகிறது.

## தீந்தமிழ் தந்த செந்தமிழ் வேந்தன்

ஓயாது செந்தமிழை உரைத்த நாவும்
ஒண்தமிழை ஆய்கின்ற உளமும் என்றும்
சாயாத தமிழ்ப்பண்பும் தரணி தன்னில்
சந்ததமும் நின்றுலவத் தளரா வேந்த
மாயாத அரனடியில் வாழ்வோர் வாழ
வண்தமிழைக் கற்பிக்க மனத்தால் உன்னிப்
போயினையோ பொன்னுலகம் புலவா! உன்றன்
புலமையினுக் எம்மிடை நீ பொலிவாய் நின்றே!

பாவலர்களின் உளமினிக்க பாலைக் காய்ச்சி
பக்குவமாய்த் தந்தநல்ல தாயின் உள்ளம்
ஞாலமதில் உன்கையில் நாளும் வாழும்
நலமறிவோம் நறுந்தேனை ஆர்ந்தே தெய்வ
சீலமுடன் தெய்வநெறி துலக்க நின்ற
செய்யுளெலாம் செகமீது வாழும் அந்தக்
காலமதை அவைவெற்றி காணும் ஐயா!
கன்தமிழில் அவையென்றும் ஒளிரும்மெய்யாய்!

கம்பனொடு வள்ளுவனை இளங்கோ வென்னும்
கவின்சிலம்பைத் தந்தவனை புதுமை தன்னை
அம்புவியில் ஆக்கியபா ரதியை வெல்லாம்
அறிந்தவரின் திருத்தநெறி பொருந்த இங்கு
செம்புலமை திகழத்தீங் கவிதை செய்தோய்
சீரியநின் பொன்னுடலம் இங்கிலை யானுல்
நம்மவரின் நாவினிலே உள்ளத்தில் எல்லாம்
நாளும் நீ நலத்தோடு ஒளிரு வாயே!

இ. நா.

## இலங்கை--இந்திய ஒப்பந்தம்

### இந்தியன் எக்ஸ்பிரஸ் யோசனை

கொழும்பு, ஞாயிறு

"இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையேயுள்ள முக்கிய பிரச்னைகளை விட்டுப் பேச்சுவார்த்தைகள் நடாத்த இலங்கை செல்லும் இந்திய தூதுகோஷ்டியினர், 1964-ம் ஆண்டு இந்தோ-இலங்கை ஒப்பந்தத்தை மீறுவதை இந்தியா அனுமதிக்காது என்பதை இலங்கை அரசாங்கத்துக்குத் தெளிவுசெய்ய வேண்டும்" என்று இந்தோ-இலங்கைத் தகராறுபற்றி 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' தினசரி தனது ஆசிரியத் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

"தாங்கள் செய்யாத தவறுக்காக 'நாடற்றவர்' என்ற நிலைக்கு வந்துள்ள லட்சக்கணக்கான மக்களைத் தகுந்த முறையில் நடாத்த நோக்கம் கொண்டுள்ள ஒப்பந்தத்தில் திருமதி பண்டாரநாயக்கா தனது கையொப்பத்தை இட்டிருக்கிறார். இந்த மக்களிடம் நீதியாக நடந்துகொள்வது தற்போதைய யு. என். பி. அரசாங்கத்துக்கு இலகுவாக இல்லாமலிருக்கலாம். ஆனால் எழுத்திலும் நோக்கத்திலும் இந்த ஒப்பந்தம் சரியானபடி அமுலாக்கப்பட வேண்டுமென்று டில்லி வலியுறுத்த வேண்டும்" என்று மேலும் அவ்வாசிரியத் தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

## பிரதிநிதிகள் வருகைதாமதம்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் சாரணர் பொன்விழாவில் கலந்துகொள்ள, இந்தியாவிலிருந்து புறப்பட்டபிரதிநிதிகள் இன்னும் வந்துசேரவில்லை. கப்பல் கிடைக்கவில்லையென்றும், யாழ்ப்பாணத்திற்குப் புறப்பட்டிருப்பதாகவும், பிரதிநிதிகள் அறிவித்துள்ளனர். இந்தியப் பிரதிநிதிகள் நாளைவந்துசேர்வார்கள் [illegible] தெரிகிறது.

## மானிப்பாயில் நால்வர் விழா

சமயகுரவர் நால்வருக்கு மானிப்பாய் இந்து சமய விருத்திச் சங்கம் சென்ற வெள்ளிக்கிழமை விழா வெடுத்துச் சிறப்பித்தது.

இலங்கையிலும் இந்தியாவிலும் சமயகுரவர் குருபூசை கொண்டாடுவது தான் வழக்கம். ஆனால்சமயகுரவர் விக்கிரகம் பிரதிஷ்டை செய்து எழுந்தருளச் செய்வது மிகமிகக் குறைவு. மானிப்பாய் இந்து சமயவிருத்திச் சங்கத்தினர் சென்ற வருடம் இதே தினத்தில் மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார் கோயிலில் நால்வர் விக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்திருந்தனர். வருடாவருடம் வேலக்கைப்பிள்ளை (வேலக்கையிலேந்திய சுப்பிரமணியர்) யாருடன் சமயகுரவர் நால்வருக்கும் அபிஷேகம் பூஜைசெய்து எழுந்தருளச் செய்வது எனத் தீர்மானித்தனர்.

இதன்படி சென்ற வெள்ளிக்கிழமை வேலக்கைப் பிள்ளையாருக்கும் சமயகுரவர் நால்வருக்கும் மகாமண்டபத்தில் நூற்றுக்கணக்கான அடியார் முன் அபிஷேகம் நடைபெற்று அதன் பின் பூச்சப்பரத்தில் எழுந்தருளச் செய்தனர்.

— கோ

## 5000பேருக்கு கடன்உதவி

### வீடுகட்ட

கொழும்பு, ஞாயிறு

5000 பேருக்கு வீடுகள் கட்டுவதற்கான நிதி உதவியை புதிய நிதிவருடத்தில் அரசாங்கம் வழங்கவிருக்கிறது. இதற்காக ஐந்துகோடி ரூபா ஒதுக்கப்பட இருக்கிறது. முன்னைய வருடங்களில் செய்யப்பட்ட கடன் உதவிகளை விட இம்முறை வழங்கப்படவிருக்கும்கடன் உதவி [illegible]கோடியே 80 லட்சம் அதிகமாகவிருக்கிறது.

## நாட்டிலும் நகரிலும்

வித்துவான் வேந்தனார் இறந்துவிட்டாரென்ற செய்தியைக்கேட்ட எந்தக் காதும் 'ஐயோ' என்று நாவின் மூலம் கதறாமல் விடாது.

ஈழத்துக்கோர் ம. போ. சி. வந்துவிட்டார், அவர் இங்கே கம்பராமாயணத்தைக் கனிந்துரைப்பார், அதை நாங்கள் கேட்டு இன்புறுவோம் என்று ஏங்கி நம்பியிருந்த மக்கள் வேந்தனாரின் மறைவைக்கேட்டு மாறாத்துயர் கொள்வர் என்பது நிச்சயம்.

நாகேந்திரப்பிள்ளை என்ற க. வேந்தனார் வேலணையில் 5-11-18-ல் பிறந்தார். அவருக்கு இன்று 48 வயது பூர்த்தியாகிறது. சிறு வயதில் கல்வி கேள்விகளில் சிறந்து பின்பு ஆசிரிய கலாசாலையில் சேர்ந்து தேறிய பின்னர் சென்னைப் பல்கலைக் கழகத்தில் 1943-ல் வித்துவான் பட்டம் பெற்றார்.

அதற்குப் பின் யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியில் சேர்ந்து முந்தாநாள் வரை அதில் தமிழ், சைவ விரிவுரையாளராகக் கடமையாற்றி வந்தார்.

வெள்ளிக்கிழமை மாலையில் அவருக்கு திடீரென்று மாரடைப்பு ஏற்பட்டது. உடனே யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோனார்கள்நேற்று காலை சுமார் எட்டு மணியளவில் அவர் தவறிவிட்டார்.

வித்துவான் வேந்தனார் அவர்கள் ஒரு சைவப்புலவராகவும் அரசாங்க பாடப் புத்தக எழுத்தாளராகவும் சிறந்த பேச்சாளராகவும் திகழ்ந்தார். அவருடைய பேச்சில் ஆவேசம் நிறைந்திருந்தது. தமிழ் மூச்சு வீசியது.

வித்துவான் வேந்தனார் தமிழிலும், சைவத்திலும் மாந்தி அமிழ்ந்தவர் 'கவிதைப் பூம்பொழில்', 'தமிழ் இலக்கியம்' என்ற பல நூல்களையும் அச்சிட்டு வெளியிட்டுள்ளார். 1947-ம் வருடம் ஜனவரி மாதம் அவர் பரமேஸ்வராக் கல்லூரியில் சேர்ந்து ஈழத்து மாணவர்களுக்கு தமிழையும் சைவத்தையும் புகட்டினார்,

தமது இல்லத்துக்கு 'கலைச் சோலை' என்று பெயர் வைத்ததே அவரது கலையின்பத்தைக்காட்டுகின்றது.

சுமார் பத்து நாட்களுக்கு முன்பு கொழும்பு சென்று உயர் பொது தராதரப்பத்திரம் (ஜி. ஏ இயு) என்ற பரீட்சைக்குத் தோற்றினார். அப்பரீட்சையின் முடிவு தெரியாமலே அவர் போய்ச் சேர்ந்துவிட்டார்.

வேந்தனாரின் மறைவு ஈழத்துக்கு மட்டுமன்றி தமிழ் இலக்கியத்துக்கும் சைவத்துக்கும் ஒரு பெரிய நஷ்டம் என்றே கூறவேண்டும்.

--வழிப்போக்கன்

## கும்பாபிஷேகம் முடிவு

வவனியா, ஞாயிறு

வவனியா மாமடுவ குளக்கட்டினருகே நீர்ப்பாசன இலாகாவினால் கட்டப்பட்ட பிள்ளையார்கோவிலின்முதற் கும்பாபிஷேகம் திருகோணமலைக் கோணேஸ்வரக்குருக்கள் தலைமையில் மிகச்சிறப்பாகநடைபெற்றது.

கோவிலை ஸ்தாபிப்பதற்கும் வைபவத்தை நடத்துவதற்கும் மாமடுவ தபால் அதிபர் முக்கிய சிரத்தை எடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வைபவத்தில் திரு. வி வயிரவப்பிள்ளை தலைமையில் ஓர் பஜனையும் நடைபெற்றது நீர்ப்பாசன இலாகாப் பொறியியலாளர் திரு. க. சண்முகநாதன் உட்பட பல பௌத்தர்களும் இதில் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வன்னியசிங்கம் சேவை நிலைத்துநிற்பது"

## நிலைவுவிழாவில் திரு. எஸ். ஜே. வி.

மாவிட்டபுரம், ஞாயிறு

"தமிழ் பேசும் இனத்துக்கு அமரர் வன்னியசிங்கம் செய்தசேவை ஆண்டு தோறும் நினைத்துநிற்கக்கூடியது. அவரது நினைவு எப்போதும் வளர்ந்தே வரும். அமரர் வன்னியசிங்கம் நினைவாக யாழ்ப்பாணத்தில் உருவச்சிலை நிறுவுவதில் எல்லோரும் பங்குகொள்ள வேண்டும்" என்று தமிழரசுக்கட்சித்தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கோண்டாவிலில் நடைபெற்ற வன்னியசிங்கம் விழாவில் பேசுகையில்குறிப்பிட்டார்.

கோண்டாவில் நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோவில் வீதியில் திரு. இ. க. சபாபதி தலைமையில் நடைபெற்ற அமரர்வன்னியசிங்கம் விழாவில் திரு. செல்வநாயகம் தொடர்ந்து பேசியதாவது:

வன்னியசிங்கம் ஒரு சிறந்தகல்விமான், சமயபக்தன், அரசியல்வாதி. தமிழ்பேசும் மக்கள் இந்த நாட்டில் சுதந்திரத்துடன் வாழவேண்டும் என்று அவர் விரும்பினார். தமிழ்பேசும் இனத்துக்காகவே தமது வாழ்வை அர்ப்பணித்தார். அமரர் வன்னியசிங்கம் இல்லாவிட்டால் தமிழரசுக்கட்சி இவ்வளவு தூரம் வளர்ந்து இருக்குமா என்பது சந்தேகமே!

வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் பேசியதாவது:

தமிழ்ப்பேசும் மக்கள் மத்தியில் நிலவி வந்த தீண்டாமைக் கொடுமையை அகற்றுவதற்காகப்பெரிதும் முன்னின்று உழைத்தார். தீண்டாமைப்பேயின் கோர தாண்டவம் இன்று சற்றுக் குறைந்து இருக்கிறது என்றால் அதற்கு அமரர் வன்னியசிங்கம்தான் காரணகர்த்தாவாகும்.

தமிழரசுக்கட்சி ஆரம்பிக்கப்பட்டபின் நடைபெற்ற முதலாவது தேர்தலில் கோப்பாய்த் தொகுதி மக்கள் அமரர் வன்னியசிங்கத்தை தெரிவுசெய்யாது இருப்பார்களாயின் இன்று தமிழரின் கதை வேறு ஆக இருக்கக்கூடும்.

நல்லூர் எம். பி. டாக்டர் இ. எம். வி. நாகநாதன் பேசியதாவது:

திரு. செல்வநாயகத்துடன் தமிழரசுக்கட்சியை ஸ்தாபித்து விடுதலை இயக்கத்தை நடத்திச் சென்ற அமரர் வன்னியசிங்கம் எத்தனையோ கஷ்டங்களை அனுபவித்தார். சொல்லொணாத்துன்பங்கள் ஏற்பட்டன. அவற்றையெல்லாம் களைந்து விடுதலை இயக்கத்தை வளர்த்தவர் அவர். அவரது விடாமுயற்சி சுயநம்பிக்கை என்பன தான் அவருடைய சிறம்பு அம்சங்கள். அமரர் வன்னியசிங்கம் எமக்காக வாழ்ந்து மறைந்தார்.

உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் பேசியதாவது:

ஒரு இனத்தின் தலைவர்கள் தியாகங்கள் செய்தால் அன்றி அந்த இனம் முன்னேற முடியாது.

1948-ம் ஆண்டு தமிழ் பேசும் இனத்துக்கு இக்கட்டான நிலை தோன்றிய நேரத்தில் இனத்தின் நன்மைக்காகத் தம்மைத் தியாகம் செய்யக்கூடிய தலைவர்களைத் தமிழ் இனம் பெற்று இருந்தது பெரும் பயனே.

தன்மானம் உள்ள பிரஜைகளாக - இலங்கையர்களாக தமிழ்மக்கள் வாழ்வதற்கான சூழ்நிலை தோன்றியுள்ளது. இந்த நேரத்தில் அமரர் வன்னியசிங்கம் இருந்திருப்பின் எவ்வளவோ சாதனைகளைச் செய்திருக்க முடியும். அவருடைய பிரிவு துரதிஷ்டவசமானது.

### கிழக்கு மக்கள் மீது அன்பு

மட்டக்களப்பு எம். பி. திரு. செ. இராசதுரை பேசியதாவது:

சொன்னதனைச் செயலிற்காட்டிய தீரர் அமரர் வன்னியசிங்கம். அவர் கிழக்கு மாகாண மக்கள் மீது பெரும் பற்று கொண்டிருந்தவர். கிழக்கு மாகாணத்தில் வெள்ளப் பெருக்கோ, கலவரமோ எது ஏற்பட்டாலும் தமது பல வேலைகளையும் ஒதுக்கி வைத்துவிட்டு கிழக்கு மாகாணத்துக்கு உடன் ஓடிவந்துவிடுவார். கிழக்கு மாகாண மக்களைத் தமது உடன் பிறந்தவர்களாக எண்ணி அவர்களது முன்னேற்றத்துக்கு எல்லா வகையான உதவிகளையும் அவர் செய்தார்.

கொண்ட இலட்சியத்துக்காகவே உயிர் வாழ்ந்தவர். தமிழ் இனத்துக்காக தமது உயிரையே கொடுத்தவர் அவர். அவரது சிறந்த இலட்சியப்பாதையிலே நாம் செல்லுவதினால்தான் இன்று நமது விடுதலை இயக்கம் இவ்வளவு சிறப்புடன் [illegible] முடிகிறது.

வழக்கறிஞர் திரு. வேலும்மயிலும், திரு. அம்பிகைபாகன், நியாயவாதி திரு. மு. ஆலாலசுந்தரம் உட்பட மற்றும் பலரும் பேசினர். திரு. கந்தையா அனைவரையும் வரவேற்றுப் பேசினார். விழா ஆரம்பத்தில் தலைவர்கள் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர். ஊர்வலத்தில் அமரர் வன்னியசிங்கம் உருவப் படம் கொண்டுவரப்பட்டது.

---

## 'பெரும்பான்மையினரின் ஒத்துழைப்புப் பெறுவது நல்லது'

யாழ்ப்பாணம், திங்கள்

பெரும்பான்மைத் தமிழரின் ஒத்துழைபுடன் நாமோர் இயக்கத்தை நடாத்தி வெற்றிகாண்பதுசாலச்சிறந்தது. என்று மக்கள் நல்லுரிமைமுன்னணிச் செயலாளர் திரு. பி. ஜி. டேவிட் சிறுபான்மைத்தமிழர் சத்தியாக்கிரகம் பற்றி விடுத்த அறிக்கையில்தெரிவித்துள்ளார். அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

சிறுபான்மைத் தமிழர்களின் நலன் கருதி நீண்டகாலமாக உழைத்து வரும் ஸ்தாபனமாகிய மக்கள் நல்லுரிமைமுன்னணிச் செயலாளன் என்ற முறையில் இந்த அறிக்கையை எமது மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டியது கடமை எனக்கருதி இதை வெளியிடுகிறேன்.

எமது சமூக ஸ்தாபனங்களின் தீராத முயற்சியினால் தீண்டாமையின் உக்கிரம் ஓரளவு தணிந்துள்ளது என்பதை எந்தச் சிறுபான்மைத் தமிழனும் மறுக்கமுடியாது.

எமது ஸ்தாபனங்களின் வேண்டுகோளுக்கு செவிசாய்த்து தீண்டாமையின் கொடுமையை ஓரளவுக்கு குறுதததமைக்காக அரசியல் தலைவர்களுக்கும், தமிழ்ப் பெரியோர்களுக்கும் அரசாங்கத்துக்கும் எமது சமூகத்தின் சார்பில்நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கொள்கை அடிப்படையில் கட்டுப்பாட்டுக்கமைய ஒரேகுறிக்கோளைநாடி ஒரே தலைவனின்கீழ் இயங்கும்ஓர் இயக்கத்தினால் மாத்திரமே இப்படியான புனிதமான அகிம்சைப்போராட்டங்களினால் வெற்றிகாண முடியுமென்பதுஉலகறிந்தஉண்மை.

இந்தியாவில் காந்தியடிகளால் நடாத்தி வெற்றிகண்ட ஹரிஜனஉரிமைஇயக்கம் போன்றஓர்இயக்கத்தை எம் சமுதாயத்தின் முன்னேற்றத்தில் மிகவும் அக்கறை கொண்டு தீண்டாமையை அறவே அகற்ற வேண்டுமெனநல்லெண்ணம் கொண்டபெரும் பான்மைத் தமிழர்களின் ஒத்துழைப்புடன் நாம் ஓர் இயக்கத்தை நடத்தி வெற்றிகாண்பது சாலச்சிறந்ததென்பதை அறிவுறுத்துகிறேன்.

நடைமுறையில் இருந்து வரும் தீண்டாமை அரக்கனை அறவே ஒழித்துக்கட்டும் நோக்கமாக பலதரப்பட்ட அரசியற்கட்சிகளும் பல துறைகளிலும் துரிதமாக முயற்சி செய்துவரும் இவ்வேளையில் நாம்தூரதிருஷ்டியற்ற முறையில் இந்தச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் இறங்குவதுகவலைக்குரிய செயல் என்பதை வெளிப்படுத்துகிறேன்.

எனவே இவ்விடயமாக எமதுமக்கள் மிகவும் விழிப்பாக இருந்து சிந்தித்துச் செயல்பட வேண்டுமென எமது ஸ்தாபனத்தின் சார்பில் வேண்டுகிறேன்.

---

### மாவட்டசபையில்...

(8-ம்பக்கத் தொடர்ச்சி)

கலையில் நாம் முன்னேற வழி செய்தது. அதன்பின் தமிழரசுக்கட்சி பல வழிகளாலும் ஏற்றத்தாழ்வை யொழிக்க பாடுபட்டது. அமரர் வன்னியசிங்கம் பெருமுயற்சி எடுத்தார். இவையெல்லாம் நடைபெற்ற பின்பும் நமது நிலைமை சீரடையவில்லை.

தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டுமென்பதை எல்லாக் கட்சிகளும் கொள்கையளவில் ஏற்றிருக்கின்றன. இது நியாயமானகோரிக்கை என்பதை அரசாங்க அதிகாரிகளும் ஏற்றுள்ளனர். தீண்டாமையை ஒழிக்கக்கூடாது என்று எந்தக் கட்சியோ, எந்தத் தலைவரோ கூறவில்லை. அப்படியானால் ஏன் ஒழிக்கப்படவில்லை.

சைவப்புலவர் எஸ். வல்லிபுரம் குத்துவிளக்கேற்றிக் கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார். அப்பொழுது அவர் கூறியதாவது:

கத்திமுனையில் நடப்பது போன்றது இச்சத்தியாக்கிரகம். இதில் நன்கு பழக்கப்பட்ட ஒருவர் நமக்கு வழிகாட்டுகிறார். தமிழரசுக்கட்சியில் நீண்டகாலம் ஊறிப்போன திரு. நல்லையா நம் போராட்டத்திற்கு வழிகாட்டுவார்.

திருவாளர்கள் எம். சி. சுப்பிரமணியம், ஜி. நல்லையா மற்றும் பலர் பேசினார்கள்.

---

### சுவர்ணசிங் தலைமைவகிப்பார்

புதுடில்லி, செப். 18

ஐ. நா. மகாசபைக் கூட்டத்தில் பாரதத்தின் சார்பில் கலந்துகொள்ளும் தூது கோஷ்டிக்கு இந்திய வெளி உறவு மந்திரி திரு. சுவர்ண் சிங் தலைமைவகிப்பார். திரு. பார்த்தசாரதியும் இக்கோஷ்டியில் அங்கம்வகிப்பார்.

---

## பத்துவருடத்துள் ஈழத்தில் 350 நூல்கள் வெளியாகியுள்ளன

### புத்தகக் கண்காட்சி விழாவில் இரசிகமணி கனக. செந்திநாதன் தகவல்

யாழ்ப்பாணம், திங்கள்

"தமிழக எழுத்தாளருள் ஒருவரான பகீரதன் அவர்கள் இலங்கைக்கு வருதசமயம், ஈழத்து இலக்கிய சிருட்டிகள் பத்தாண்டு காலம் பின்னிநிற்பதாகக் கூறியதைக் கேட்டு அப்போது சிருட்டியாளர்களின் தரமானசிருட்டிகளை அவர்முன் காட்டுவதற்கு முடியாமலிருந்தது பத்திரிகையில் அவ்வப்போது வெளிவருகின்ற உயர்ந்த சிறுகதைகளை, கவிதைகளை ஒன்றாகக்கொண்ட நூல்களின் எண்ணிக்கை விரல்விட்டெண்ணக்கூடியனவாகவே இருந்தன. ஆனால் நடந்த 10 ஆண்டு காலமாக இலங்கை இலக்கியப்படைப்பாளிகளின் சிருட்டிகள் நூலுருவம்பெற்று திகழ்கின்றன. இவ் இடைக்காலத்தே 40 சிறுகதைத்தொகுதிகள் 25நாவல்கள் நூற்றுக்கு ாமற்பட்ட கவிதைகள் தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன. 1955க்கும் 1965 க்கு இடைப்பட்ட காலத்தே 350 நூல்கள் வெளிவந்துள்ளன."


இவ்வாறு நேற்று முன்தினம் மாலை யாழ்ப்பாணம் பொதுசன நூல்நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஈழத்துப் புத்தகக்காட்சி விழாவின்போது யாழ் இலக்கியவட்டத் தலைவர் இரசிகமணி கனக செந்திநாதன் பேசுகையில் குறிப்பிட்டார். இப்புத்தகக்காட்சியை திரு. ஆசீர்வாவம் திறந்து வைத்தார். தலைவர் கனக. செந்திநாதன் பேசுகையில் மேலும்குறிப்பிட்டதாவது:

ஈழத்து இலக்கிய இரசிகர்கள் ஈழத்து இலக்கிய சிருட்டிகளை வாங்குவதன் மூலம், ஈழத்துப் படைப்புக்களை ஆதரிக்கவேண்டும். மணவிழா பரிசாகவோ, பிறந்தினப்பரிசாகவோ, போட்டிகளின் பரிசாகவோ, இலங்கை நூல்களைவாங்கி வழங்கும் பழக்கத்தை நம்மவர் கொள்வார்களானால் படைப்பாளிகள் மென்மேலும்தமது ஆக்கங்களைவெளியிடுவதற்கு ஊக்கம் பெறுவார்கள்.

ஈழத்தமிழ் புத்தகக்கண்காட்சியின் அமைப்பாளரும், யாழ். பொதுசன நூல்நிலைய அதிபருமான திரு. வே. இ. பாக்கியநாதன் வரவேற்புரை நிகழ்த்திய போது கூறியதாவது:

ஈழத்து எழுத்தாளர்களின் ஆக்கங்களாக 400க்கு மேற்பட்ட நூல்கள் உள்ளன. இவற்றுள் அநேகமானவை எமது பொதுசன நூல் நிலையத்தில் இடம் பெறாமலே இருக்கின்றன. இதற்குக்காரணம் நூல்கள் வெளியாகும் காலத்தில்-அவற்றை உடனடியாக வாங்குவதற்குப் பொதுசன நூல்நிலையத்தின் வசதியின்மையே. இங்குவெளியாகியுள்ள பெரும்பான்மையான நூல்களைப் பார்க்குமிடத்து நம்மவர் பிறருக்கு எவ்வகையிலும் சளைத்தவரல்லர் என்னும் உண்மையைநாம் உணர்கின்றோம். இந்தப் புத்தகக்கண்காட்சியை அமைப்பதற்கு உதவிய யாழ். இலக்கியவட்டத்தினருக்கு நாம் என்றும் கடமைப்பாடுடையோம்."

புத்தகக்கண்காட்சியைத் திறந்துவைத்த திரு எம். வி. ஆசீர்வாதம் இலக்கியம்மனித உள்ளத்தைப் பண்படுத்தி மனிதனைச் செம்மையுற வாழ்வதற்கு வழி காட்டுகின்றதென்று கூறினார்.



### திரைப்படத் தொழிலில் பயிற்சி

யாழ்ப்பாணம், ஞாயிறு

சிலோன் ஸ்ருடியோ ஸ்தாபன சினிமாப்பட ஒலிப்பதிவாளர் திரு. ந. மகாதேவன் சினிமாப்பட ஒலிப்பதிவுத்தொழில் நுட்பங்களில் விசேஷ பயிற்சி பெறுவதற்காக ஏ. வி. எம். ஸ்ருடியோ ஸ்தாபனத்தாரின் அழைப்பையேற்று 18-ந் திகதி விமானமூலம் இந்தியாவுக்கு புறப்படுகிறார்.

இவர் அமெரிக்க டெலிவிஷன் சினிமாப்படத் தொழில் நுட்பக்கழக அங்கத்தவரும் பிரித்தானிய டெலிவிஷன் சினிமாப்பட தொழில் நுட்பக்கழக அங்கத்தவருமாவார்.

---

### எல்லோர்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ருக்கிறேன்.

சமூக ஏற்றத்தாழ்வை ஒழிக்க பல கோணங்களிலிருந்தும், பல வழிகளில் முயற்சி எடுக்கவேண்டும். தமிழரசுக்கட்சி பல வகையில் முயற்சி எடுத்து வருகிறது. நீங்கள்எடுக்கும் முயற்சியைத்தடுக்க எமது கட்சி முன்வராது. சில தவறான பிரசாரத்தினால் இந்த இயக்கம் தவறான கருத்தைப் பெற்றுள்ளது.

இப்போராட்டம் சிறுபான்மைத் தமிழருக்கும் பெரும்பான்மைத் தமிழருக்கும் இடையில் உள்ள போராட்டமாக இருக்கக் கூடாது. பெரும்பான்மைத் தமிழரின் ஆதரவுடன்கூடிய போராட்டமாக அமைய வேண்டும்.

---

### நம்பிக்கையில்லாத்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தீர்மானம் மேலும் கூறுவதாவது:

"வழக்கமான நாகரிக முறைப்படியும், சட்டத்திற்கிணங்கவும் விசாரணை நடத்தப்பட்டிருந்தால், பொதுமக்களின் மனச்சாட்சியை அதிர்ச்சிக்குள்ளாக்கி, மானபங்கப்படுத்தியிருக்கும் இக்கோரக் கொலை நடந்திருக்க முடியாது"

"அரசியல் ரீதியில் நியமிக்கப்பட்ட சட்ட அதிகாரிகளை வழக்கு விசாரணையில் நேரடியாகப் பங்கு பற்றி, கொலையை வெறும் கட்டுக்கதை எனச் சுட்டிக் காட்டி அரசாங்கம் இதுவரையில்லாத நடவடிக்கையொன்றில் ஈடுபட்டுள்ளது" என்றும் அத்தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

சி. ஐ. டி பகுதியில் இல்லாத காகுலடிசில்வா விசாரணையின்போது சமூகமளித்திருந்தது பற்றியும் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு நகை பூண்ட அம்மையார்

நாட்டிற்கு நற்பணி ஆற்றும் நங்கையர் வரிசையில் இன்றைய மங்கையர் மன்றத்தில் திருமதி மங்கையர்க்கரசி முருகேசு இடம் பெறுகிறார்.



மங்கையர்க்கரசி முருகேசு தோற்றத்தில் மிக எளிமையாகக் காட்சியளிக்கிறார். இவர் அன்பும் அறிவும் பண்பும் நிறைந்தவர். தமது பிறந்த பொன்னாடாகிய காரைநகரில் நெசவு நிலையத்தை உண்டாக்கி அயராது உழைத்து வருகிறார். பெண்கள் கிராமமுன்னேற்றச் சங்கத்தலைவியாக பன்னெடுங்காலம் பணியாற்றி வருமிவர் மக்களின் நெஞ்சங்களில் நிறைந்திருக்கிறார். இவரை இவ்வூர் மக்கள் 'அம்மா' என்றும் தாய் என்றும் அன்பு குழைய அழைக்கிறார்கள். பேட்டியின்போது சமூகமணி திருமதி முருகேசு தெரிவித்த மணியான கருத்துக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

சமுதாயத்திலே நாட்டிற்கு நற்பணி ஆற்றப் பல நங்கையர்கள் விரும்புகின்றனர். ஆனால் எல்லோராலும் அவர்களது எண்ணத்தைப் பூர்த்தி செய்ய முடிவதில்லை. இல்லறத்தில் இருக்கும் பெண்கள் சமூகசேவையில் ஈடுபடுதல் நல்லது. கணவரின் விருப்பத்துடன்தான் அதனைச் செய்ய வேண்டும். சமூகப்பணியில் ஈடுபட்டுக் கொண்டு குடும்பத்தைச் செம்மையாகக் கவனிக்க முடியுமா என்பதை ஒரு குடும்பப்பெண்ணிற்கு அவரது கடந்து வந்த வாழ்க்கைப் பாதை புரிய வைக்கும். சமூக சேவையில் மனதுடன் பழக வேண்டிய சந்தர்ப்பம் இருக்கிறது. அதற்கேற்ப உள்ளமும் விரிவடைதல் வேண்டும் என்கிறார் சமூகமணி மங்கையர்க்கரசி முருகேசு.

உங்களுக்கு எப்படி சமூகப்பணியில் நாட்டம் ஏற்பட்டது என வினவினேன். அதற்கு அவர் "எனது கணவர் கொழும்பில் உத்தியோகம் வகிக்கும்போது எங்களுக்கு பல்வேறு மக்களின் தொடர்பு ஏற்பட்டது. அதில் நங்கையர் பணிக்குழு மகளிர்மன்றம், சைவமங்கையர் கழகம் போன்ற சங்கங்களின் தொடர்பு சமூகசேவையில் விருப்பமூட்டி [illegible]. நான் கொழும்பில் நங்கையர் குழுவின் உபதலைவியாக இருக்கும்போது அப்பொழுது தலைவியாக இருந்த திருமதி எலியேசர் இப்போ அதன் தலைவியாக இருக்கும் திருமதி நடராசா மற்றும் திருமதிகள் சதாசிவம், டாக்டர் நல்லநாதன், டாக்டர் நெவிக்சன், செல்லத்துரை ஆகியோர் நான்சமூகசேவகியாவதற்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்தனர்.

எனது கிராமமாகிய காரைநகரில் ஒரு நெசவு நிலையம் உருவாக வேண்டுமென்ற எனது எண்ணம் செயற்பட்ட நாள் மறக்க முடியாத பொன்னாளாகும். நெசவுநிலையம் கிராம மக்களுக்கு மிக்கபயனளிக்கிறது. வறிய குடும்பங்களில் இருந்துவரும் பெண்கள் ஒரு தொழிலைக் கற்றுக் கொள்கிறார்கள். இதனால் ஓரளவு வருமானத்தைப் பெற்றுக் கொள்கிறார்கள். மேலும் இங்கு நெசவு பயின்ற பிள்ளைகள் இக்கிராமமெங்கும் தனித்தனியாகவோ அல்லது தனிப்பட்டவர்களால் நடாத்தப்படும் நிலையங்களிலோ திறம்பட வேலை செய்ய உதவுகிறது. வீட்டில் ஒவ்வொருவரும் முடியுமானால் ஒரு கைத்தறி வைத்திருக்க வேண்டும். அதனால் அவர் தனக்கும் தன் குடும்பத்திற்கும் தேவையான துணிகளை உற்பத்தி செய்யலாம். இதனால் நம்நாட்டில் துணி

— 3 —
பேட்டி: மேரி

[illegible]ப்பிரச்னை ஏற்படாது. நாம் நமது தேவையைப் பூர்த்தி செய்வதால் வெளிநாட்டுச் செலாவணி மிச்சமாவதுடன் அயல்நாட்டை நம்பியிருக்கும் அடிமை உணர்ச்சி நம்மைவிட்டு நீங்கும்.

குடிசைக் கைத்தொழிலில் பெண்களையும் பெற்றோர்களையும் ஈடுபடுமாறு ஆர்வமூட்டி கிராமப் பெண்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தி வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்கப் பொருளாதாரத்தைப் பெருக்க வேண்டுமென விரும்புகிறேன். நாடு துணி உற்பத்தியில் தனது சுய தேவையைப் பூர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதுவே நமது நோக்கமும் ஆகும். இச்சங்கத்தின் செயல்களை பெரிய அளவில் விரிவுபடுத்தி மற்றையவற்றிற்கு முன்மாதிரியாக ஆக்க வேண்டுமென்பதே எனது நோக்கமாகும் என்றார் 'சமூகசேவைசெய்பவர் எப்படித் திகழ வேண்டும்' என்ற வினாவிற்கு விடையாகத் திகழும் மங்கையர்க்கரசி அம்மையார்.

★

# புன்னகை பூக்கும் நங்கையர் தேவை

மகிழ்ச்சி ததும்பும் மங்கையர் பன்னிருவரைத்தேடுகிறார் தலைநரைத்த திருமதி மித்ரா கிரேமர். இவர் 6 ஆண்டுகளாக ஆஸ்திரேலியாவில் வாழ்கிறார். இவரது பிறந்தநாடு செக்கோஸ்லாவாக்கியா. இவர் முகம் சிணுங்காத அலுத்துக் கொள்ளாத எப்பொழுதும் புன்னகை பூக்கும் பெண்களை தனது பெரிய வீட்டில் திரட்டவிரும்புகிறார். ஆறு வருடங்களாகியும் இவரது முயற்சி கைகூடவில்லை. இதனை இவர் விளம்பரத்திற்காக விரும்பவில்லை. உண்மையிலேயே அப்படியானவர்களுடன் வாழ ஆசைப்படுகிறார். இதற்கென சிட்னியில் பெரிய வீடு வாங்கியுள்ளார்.

திருமதி மித்ரா கிரேமர் பொதுவுடைமையர்களிடம் சிறைப்பட்டவர். கணவர் அவரை விட்டுவிட்டு ஓடிவிட்டார். சிறுகுழந்தையை எந்த உதவியுமின்றி அவரே வளர்க்கவேண்டியிருந்தது. 'பொதுவுடைமையர்களிடம் சிறைப்பட்டிருந்த நான் செக்கோஸ்லாவாக்கியாவில் இருந்து தப்ப நள்ளிரவில் பட்டினியுடன் காலில் இரத்தம் சொட்ட நடந்து வந்தபோது ஒரு சபதம் எடுத்துக் கொண்டேன். தப்பித்து விட்டால் இனி ஒருபோதும் அலுத்துக்கொள்வதில்லை என்று உறுதிகொண்டேன்' என்கிறார் திருமதி மித்ரா கிரேமர். உறுதியை அவர் நீண்டநாட்களாகக் கடைப்பிடித்துவருகிறார்.

ஆகையால் தம்மைப் போல அலுக்காத மங்கையரைத் திருமதி மித்ரா தேடுவதில் ஆச்சரியமில்லையே!

# இப்படியும் இருக்கின்றனர்

பெண்ணிற்கு பெருமையளிப்பது கற்பும் கல்வியுமன்றோ! தனது சமையல் கலையினால் கணவனை மகிழ்வித்து உள்ளம் குளிரும் தமிழ்ப்பெண்ணை அன்றாடம் நாம் சந்திக்கலாம். இவற்றிற்கு எதிர்மாறாக ரூஷ்சியா வெள்ளைக்கார நங்கையர் திகழ்கின்றனர். 110,000 வெள்ளைக்காரப் பெண்களுக்குச் சமைக்கத் தெரியாதாம். இவர்கள் தங்கள் பொன்னான நேரத்தை அலங்காரத்திலேயே செலவழிக்கிறார்களாம். பருவவயதிலே இருதடவை திருமணம் செய்து விடுவார்களாம். இதனால் இங்கு விவாகரத்தும் அதிகரித்துள்ளது. விவாகரத்துச் செய்துள்ள தானியா சிங்கிராம் என்ற பெண்மணி இந்தநாட்டுப் பெண்களை குடியும் களிப்புகளும் பாழாக்குகின்றன கூறியுள்ளார்.

அழகு

## வதனம் பள பளக்க வேண்டுமா?

முகத்தில் ஏற்பட்டிருக்கும் சுருக்கங்களை போக்குவதற்கு கிளிசரினையும் தேனையும் சேர்த்து மெதுவாக அழுத்தித் தேயுங்கள். முகத்தில் சிறிதளவாக தேய்த்து மறு நாள் வரை வைத்திருந்து சூடாக்கிய மழைத் தண்ணீரில் கழுவுவது நல்லது. இப்படிச் செய்து வந்தால் முகத்தில் விழும் சுருக்கங்கள் மறைந்துவிடும்.

வெள்ளரிச் சாற்றை எடுத்து முகத்திற்கு தேய்த்து வந்தால் முகம் பளபளப்பாகஇருக்கும் கரங்களின் சொறசொறப்புத் தன்மையை போக்குவதற்கு இதே மாதிரிச் செய்து வந்தால் கரங்கள் அழுத்தமாகவும், மிருதுவாகவும் மாறிவிடும். வெள்ளரிக்குப் பதிலாக அன்னாசிப்பழத்தையும் எலுமிச்சம் பழத்தையும் உபயோகிக்கலாம்.

-செல்வி வே. ஜெயலட்சுமி

# மங்கையர் மன்றம்

## இஸ்ரேலியப் பெண்மணிக்கு இந்தியா அளித்த காட்சி

### 'இந்தியாவின் அறிவின்முன் நான் முழந்தாளிடுகிறேன்'

— மலர் —

ஆபிரிக்க நடனம் உணர்ச்சிவசமானது. ஆனால் ஆத்மாவின் பலதரப்பட்ட அம்சங்கள் பொருந்தியது. அதன் ஆத்மாவைக் கண்டு பிடிக்க வேண்டியுள்ளது.

இந்திய நடனம் ஆத்மீகமானது. ஆனால் இந்த ஆத்மீகத்தில் பல உணர்ச்சிகள் உண்டு. இங்கு உணர்ச்சியைக் கண்டுபிடிக்கவேண்டும்.

இந்திய நடன நுட்பத்தில் தன்னை மறைப்பது என்பது நடவாத காரியம். கட்டுப்பாட்டை இழக்க அது தன்னை அனுமதிக்க முடியாது.

ஃ ஃ ஃ

கானாவுக்கு விஜயம் செய்தபின் நான் இதை அறிந்துகொண்டேன். நடனத்தின் இறைவன் ஒரு ஆபிரிக்கனாகத்தான் இருந்திருக்கவேண்டும். இந்தியாவுக்கு விஜயம் செய்து நான் அறிந்துகொண்டது: தாளம், ஒழுங்கு, காலம் இவற்றின் கடவுள் ஓர் இந்தியனாகத்தான் இருந்திருக்க வேண்டுமென்று.

அங்கு கானாவில் உணர்விலும் புலனிலும், வாழ்க்கை வாழ்க்கையாகவே, கூடாமலும், குறையாமலும் இருக்கிறது. இங்கு, இந்தியாவில் எண்ணத்திலும், எழுத்திலும், கலைப்பூரணமாகுவதே வாழ்க்கையாகிறது.

ஃ ஃ ஃ

இந்தியாவில் நான் கற்றதைவிட ஆபிரிக்காவில் எந்த அளவிலும் குறைவாக நான் கற்கவில்லை. நான் சொல்லுவேன்: நான் ஆபிரிக்காவைக் காதலிக்கிறேன். இந்தியாவை அஞ்சலி செய்கிறேன், நான் ஆபிரிக்கனுடன் அழுகிறேன் இந்தியனுடைய அறிவின் முன்னால் முழந்தாளிடுகிறேன்.

(முற்றும்)

# சிந்தனைத் துளிகள்

கவலைப்படாமல் இருக்கக் கற்றுக் கொள்ளவேண்டும். கவலைப்படுவதை ஒத்திப் போட்டால் காலம் அதைப் போக்கிவிடும்.

ஃ ஃ ஃ

கண்ணீரை ஆயுதமாகப் பயன்படுத்திக் காரியத்தை சாதித்துக்கொள்ள எண்ணுவது பைத்தியக்காரத்தனம்.

ஃ ஃ ஃ

அழுகையினால் சாதிக்க நினைப்பதை, எளிதில் அன்பினால் சாதிக்கமுடியும். கனிவான பேச்சு கண்ணீரை விடச் சக்திவாய்ந்தது.

ஃ ஃ ஃ

அவசியத்தையும் சக்தியையும் மீறி எதன்மீதும் ஆசை வைக்கக்கூடாது. ஆடம்பரவாழ்வில் நாட்டம் கொள்வது தவறு. அடக்கமாக இருப்பதுதான் நிலைக்கும்.

—சரோஜினி சங்கர்

# ஒளி பெற......

○ விளக்குச் சிம்னிகளில் உள்ள புகையைத் துடைக்கும்போது உமிச் சாம்பல் கொஞ்சம் எடுத்து வெள்ளைத்துணி ஒன்றால் உரோஞ்சித் துடைத்தால் மிகவும் பிரகாசமாக இருக்கும்.

○ சமையல் பாத்திரங்கள் கழுவிய பின் வெந்நீருக்குள் சிறிது எலுமிச்சம் புளி விட்டு அதில் கையைக் கழுவினால் கையிலுள்ள கறி அகன்றுவிடும்.

○ வீட்டில் உடுப்புக்களுக்கு ஸ்திரி போடும்போது சிறிது "பொருக்ஸ்" பவுடரைக் கரைத்து தெளித்தால் உடைகள் மினு மினுப்பாகவும் மடமடப்பாயும் இருக்கும்.

- ஆ. ப. சந்திரநாதன்.

# கட்டுப்பாடு விதிகள்

உடல் மெலிய வைக்கும் திறன்கொண்டவை என்று விளம்பரப்படுத்தப்படும் உணவுகள் மீது பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஆதரவு கொண்ட உணவுத்தரக்குழு கண்காணிப்புச் செலுத்தி வருகிறது.

அவ்விதமான உணவுகளில் சேர்க்கப்படும் பொருட்கள் இனிப்புச் சுவை தரும் செயற்கைப் பொருட்கள் ஆகியவை பற்றி திட்டவட்டமான கட்டுப்பாடு விதிகள் இருக்கவேண்டுமென்று அக்குழு யோசனை கூறியுள்ளது.

உடல் மெலிவதற்கு உதவும் உணவுகள், இருதய நோய்களை ஏற்படுத்தா என்றும், இருதய நோய்களிலிருந்து பாதுகாப்பளிக்கும் என்றும் விளம்பரப்படுத்துவதை அடியோடு தடை செய்ய வேண்டும் என்றும் அக்குழு கூறியுள்ளது.

# சமையல் கவனிப்பு

1. நெருப்புப் பெட்டி, மண்ணெண்ணெய் முதலியவைகளைக் குழந்தைகளின் கைக்கெட்டும்படி வைக்கக் கூடாது.

ஃ ஃ ஃ

2. அடுப்பில் பதார்த்தங்களை ஏற்றி விட்டு கவனப்பிசகாக வேறிடம் போய் விடக் கூடாது.

ஃ ஃ ஃ

3. எண்ணெய்ச்சட்டி அடுப்பிலிருக்கும்போதும் இறக்கும்போதும் அதிக கவனம் வேண்டும். தீ விபத்துக்கள் பெரும்பாலும் எரியும் எண்ணெய்ச் சட்டியிலிருந்துதான் ஏற்படுகின்றன.

ஃ ஃ ஃ

4. சூடான பாத்திரத்தை இறக்கத் துணியோ, இடுக்கியோ கட்டாயம் அருகிலிருக்கட்டும்.

ஃ ஃ ஃ

5. பக்குவமான எந்த ஒரு பதார்த்தத்தையும் மூடாமல் இருக்கவேண்டாம்.

ஃ ஃ ஃ

6. தயிர் மோர் வைக்கும் பாத்திரங்களைச் சுத்தம்செய்ததும் வெய்யிலில் வைக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலாலி மீனவர் கைகலப்பில் நால்வர்நிலை கவலைக்கிடம்

காங்கேசன்துறை, ஞாயிறு பலாலியில் இரு மீனவர் கோஷ்டி கிடையில்ஏற்பட்ட கைகலப்பின் காரணமாக நாலு மீனவர்கள் படுகாயங்களுடன் காங்கேசன்துறை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காயப்பட்டவர்களான சூசை சைமன், லூக்கஸ் மைக்கேல்பிள்ளை, ஜேம்ஸ் அல்பிறட் ஆகியோர் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. காயப்பட்டவர்களுள் ஒருவருக்கு 70 வயது. கத்திகளும், றிவோல்வர்களும் இக் கைகலப்பில் உபயோகிக்கப் பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இது சம்பந்தமாக அந்தோனிப்பிள்ளை என்பவர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். காங்கேசன்துறைப் பொலிஸ் பகுதி உத்தியோகஸ்தர் திரு. இராமநாதன் இது சம்பந்தமான விசாரணையை நடாத்தி வருகின்றார்.

# "சாரணர் இயக்கத்தால் சகோதரத்துவம் வளரும்"

## யாழ். சாரணர் பொன் விழாவில் அமெரிக்க தூதாக அதிகாரி

யாழ்ப்பாணம், திங்கள் "சாரணர் இயக்கம் ஒரு சகோதரத்துவ இயக்கம். சாரணர் விதிகளின்படி மனிதவாழ்க்கையைஅமைத்துக்கொண்டால் அதிகபலன் பெறமுடியும். இதனால் எல்லோருக்கும் நன்மை கிடைக்கும்,"

யாழ்ப்பாணம் சாரணர் இயக்கத்தின் பொன் விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு விழாவை ஆரம்பித்து வைத்துப் பேசிய அமெரிக்க ஸ்தானிகர் காரியாலய அதிகாரி திரு. யூஜின்டோரேன் மேற்கண்டவாறு கூறினர்.

யாழ்ப்பாணம் பழையபூங்காவில் ஆரம்பமான இவ்விழாவில் 31 சாரணர்குழுக்களைச்சேர்ந்த ஆயிரம்சாரணர்கள் கலந்து கொண்டார்கள். றிச்மண்ட் கல்லூரியிலிருந்தும் சாரணர் வந்திருந்தனர். கல்லூரி மாணவிகளும்வந்திருந்தனர்.

திரு. யூஜின் டோரேன் மேலும் கூறியதாவது:-

உலகம் சுருங்கிவருகிறது. சாரணர் இயக்கத்தின்மூலம் அதை விரிவுபடுத்தி சகோதரத்துவத்தை நிலை நாட்டலாம். சாரணர் இயக்கம் ஒருஉலக இயக்கம். அது சமூகத்தையும் நாட்டையும் விருத்தி யடையச்செய்கின்றது. வாழ்க்கையில் நம்பிக்கையுண்டாகின்றது.

சாரணர்களின் புதியகட்டடத்தைகுத்துவிளக்கேற்றி திறந்துவைத்த இலங்கை சாரணர் உதவி கமிஷனர் முதலியார் ஏ, எல். தஸநாயகா கூறியதாவது; மற்ற இடங்களிலும் பார்க்க யாழ்ப்பாணத்துச் சாரணர் இயக்கம் நன்கு வளர்ச்சியடைந்திருக்கிறது. சில இடங்களில் இடையிலேயே சாரணர்இயக்கம்நின்றுவிட்டது. ஆனல் இங்கு உற்சாகமளிக்கக்கூடியவிதத்தில் வளர்ந்துள்ளது மேலும் 50 வருடங்கள்இந்தஇயக்கம் இங்கு வளர்ந்து தொண்டுபுரியுமென நம்புகின்றேன்.

சாரணர்கள் கைப்பணிப் பொருட்காட்சியை உதவி வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம் திறந்துவைத்துச்சாரணர்களைப் பாராட்டினர்.

யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் திரு.ஜே.எம் சபாரத்தினம்யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு.ரீ.ஜே. ராஜரத்தினம் மற்றும் பல பிரமுகர்கள் இவ் விழாவில் கலந்துகொண்டனர்.

விழா ஆரம்பமாகுமுன் சாரணர் முக்கிய வீதிவழியாக அணிநடை ஊர்வலம் நடாத்தினார்கள்.

இவ்விழா 20ம்தேதிவரை தொடர்ந்துநடைபெறும்.

## உள்நாட்டு அமைச்சரை சந்திப்பர்

யாழ்ப்பாணம், திங்கள் யாழ்ப்பாணத்துக்கு இம்மாதம் 22-ம் திகதி விஜயம் செய்யும் உள்நாட்டு அமைச்சர் டாக்டர் டபிள்யூ தஹநாயக்காவை சந்திக்க, சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி குழுவொன்று தீர்மானித்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

வடபகுதியில் பல்வேறு இடங்களிலும் சிறுபான்மைத்தமிழர்களுக்கு இருக்கும் கஷ்டங்கள் பற்றித் தெளிவாக விளக்கும் ஒரு நீண்ட மகஜரை மந்திரியிடம் இக் குழு சமர்ப்பிக்க விருப்பதாகவும் தெரியவருகிறது.

## யார்கவனிப்பார்கள்

சுழிபுரம், ஞாயிறு சுழிபுரம் திருவடிநிலையிலுள்ள இரண்டு அரசாங்கத்துக்குச் சொந்தமான கட்டிடங்கள் கவனிப்பார் அற்று மிகவும் அபாயகரமான நிலைமையிலிருக்கின்றன. கறையான் புற்றுக்கள் மலைபோல் வளர்ந்துள்ளன. கூரைகள் காற்றினால் சேதப்படுத்தப்பட்டுள்ளன. காட்டு வயிரவர் கோவிலுக்கு முன்புள்ள நெசவுநிலையக் கட்டிடத்திலுள்ள பலபொருட்கள் தினமும் குறைந்துகொண்டேயிருக்கத் தெரியவருகிறது. தமிழ்க்கலவன் பாடசாலைக்கு பக்கத்தேயுள்ள சீனித் தொழிற்சாலைக் கட்டடம் கறையான் புற்றினால் மூடப்பட்டுள்ளது. தகரங்கள் உடைக்கப்பட்டு பிடுங்கிஎறியப்பட்டும் உள்ளன.

## போயாதினசந்தைகள்

கொலென்னவ, ஞாயிறு எல்லாக்கிராமப் புறங்களிலும் போயாதினச்சந்தைகளை நடாத்தினால், உயர்ந்து வரும் விலைவாசிகளை ஓரளவுக்காவது கட்டுப்படுத்தலாம். இத்தகைய சந்தைகளில் மனிதாபிமானமற்ற வியாபாரிகளின் கைகளில் விழாது, கமக்காரர் தமது பொருட்களை விற்பனவு செய்யலாம், வாடிக்கையாளரும் குறைந்தவிலையில் புதிய மரக்கறிகளை வாங்கிப் பயனடையலாம்.

இவ்வாறு முல்லேரியா பட்டினசபையால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த போயாதினச்சந்தையின் ஆக்குரார்ப்பணக்கூட்டத்தில் பேசுகையில் திருபதி விவியன் குணவர்த்தன (எம்.எம்.வி. குறிப்பிட்டார்.

## இராம் ஆசிரியர் தற்கொலை

வியாங்கொட, ஞாயிறு திவெத்துகடவைச்சேர்ந்த 20 வயதான பள்ளிக்கூட ஆசிரியர் வி ஏ. திலகரத்ன என்பவர் தனது வீட்டுக்கருகாமையிலுள்ள மரமொன்றில் கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலைசெய்து கொண்டார்.

# கோப்பாய் ஞானபாஸ்கரோதய சங்கம் பொலிசுடன் பொருதுகிறது

## யாழ். ஹொக்கி சங்கத்தினரின் இறுதிப் போட்டியில்

கோப்பாய், ஞாயிறு புதன்கிழமை செப். 21-ந் திகதியன்று மாலை 4-30 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கும் யாழ்ப்பாண ஹொக்கிச் சங்கத்தினரின் இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் பொலிஸ் கோஷ்டியுடன், கோப்பாய் கிராமத்திலுள்ள கிளப்பான ஞானபாஸ்கரோதய சங்கக்கோஷ்டி பொருதுகிறது.

கிராம விளையாட்டுச் சங்கமொன்று இவ்வளவு தூரம் முன்னேறியுள்ளது பெருமை தரும் விஷயமாகும். ஆனல். ஞானபாஸ்கரோதய சங்கம் இவ்வளவு தூரத்துக்கு வருவதற்குப் பல கஷ்டங்களைத் தாண்டவேண்டி இருந்தது. என்றாலும், எதற்கும் அஞ்சாது, இக்கோஷ்டி வீரர் யாழ்ப்பாணத்திலுள்ள பல பிரபல விளையாட்டுச் சங்கங்களைத் தோற்கடித்து, இந்த இறுதிப் போட்டியில் கலந்து கொள்ளும் வாய்ப்பினைப் பெற்றுள்ளனர்.

ஞானபாஸ்கரோதய சங்கக்கோஷ்டிக்குத் தங்கராசா தலைமை தாங்குவார். இக்கோஷ்டியினர், யாழ்ப்பாணம் ஹொக்கி சங்கத்தினர் நடாத்திய போட்டிகளில் இரண்டில் கலந்து கொண்டனர். முதலாவதில் வெற்றியீட்டிய இவர்கள், இரண்டாவதில் வெற்றி தோல்வியின்றி முடித்துக் கொண்டனர்.

இன்ஸ்பெக்டர் எச். வி. பெரேராவின் தலைமையிலுள்ள பொலிஸ்கோஷ்டியினரே இறுதிப்போட்டியில் வெற்றிபெறுவர் என எதிர்பார்க்கப்பட்டாலும், வெற்றி அவர்களுக்கு இலகுவில் கிட்டுமென்பது சந்தேகமே.

எதிர்த்துப் போராடுவதில் வல்லவர்கள் என்று ஞானபாஸ்கரோதய கோஷ்டியினர் பெயர்பெற்றிருப்பதால், போயா தினமாகிய புதன்கிழமை நடைபெறும் இறுதிப்போட்டி மும்முரமான போட்டியாக அமையுமென எதிர்பார்க்கலாம்.

## சைக்கிள் ஓட்டப் போட்டி முடிவுகள்

கோண்டாவில், ஞாயிறு வன்னியசிங்கம் நினைவு விழாவையொட்டி நடாத்தப்பட்ட சைக்கிள் ஓட்டப் போட்டியில் பரிசுபெற்றோர்களின் விபரம் வருமாறு:-

கே. சண்முகம் (புத்தூர்), சி. சபாரத்தினம் (கொக்குவில்), ஆர். செல்வரத்தினம் (வல்வெட்டித்துறை), செல்லையா கணேசு (கோண்டாவில்)

வெற்றிபெற்றவீரர்களுக்கு அமைச்சர் திருச்செல்வம் பரிசில்கள் வழங்கினர்.

## றெட்டறி கிளப் ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், திங்கள் யாழ்ப்பாண றெட்டறி சங்க இலாகாவிற்கு இராப்போசனவிருந்து யாழ்ப்பாணத்திலுள்ள புளூறிபன்விடுதிச்சாலையில் நடைபெற்றது. பருத்தித்துறைறெட்டறி சங்கத்தின் [illegible]திநிதிகளும் மற்றும் பல பிர[illegible]ளும் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர்.

சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு. டி. தெளசைராம் சங்கத்தின் கடந்த கால சேவைகளைப்பற்றிக் குறிப்பிட்டார் திரு. பி. எஸ். ஜோசேப் நடப்பு வருடத் தலைவராகத்தெரிவு செய்யப்பட்டார்.

## கட்டிடத் திறப்பு விழா

உடுப்பிட்டி, ஞாயிறு எதிர்வரும் 23-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரியில், புதிதாகக் கட்டப்பட்ட கட்டிடத்தை உள்நாட்டு மந்திரி கலாநிதி டபிள்யு தஹநாயக்கா திறந்துவைப்பார்.

உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் தலைமையில் மந்திரிக்கு வரவேற்புபசாரம் நடைபெறும்.

கல்லூரி அதிபர் திரு. எம் எஸ். சினித்தம்பி ஜே. பி வரவேற்புரை நிகழ்த்துவார்.

## சிறப்புப் பேருரை

சுழிபுரம், ஞாயிறு முத்தமிழ்க் காவலர் அறிஞர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மாலை 7 மணிக்கு வழக்கம்பரை அம்மன் கோவில் முன்றலில் 'திருக்குறள் ஒரு வாழ்க்கை நூல்' என்னும் பொருள்பற்றி சிறப்புப் பேருரை நிகழ்த்துவார்.

விழாவுக்கு வட்டுக்கோட்டைத்தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கம் தலைமை தாங்குவார்.

## வேலையற்ற இளைஞருக்கு மந்திரி புத்திமதி

அளவை, ஞாயிறு வேலையற்ற இளைஞர் விவசாயத்தில் அதிக அக்கறை காட்டவேண்டும், இது அவர்களுக்கு நல்ல வருவாயையும் கொண்டுவரும். மேலும் மேலும் அதிக வேலையற்ற இளைஞர்களுக்கு விவசாய வேலைகளில் ஈடுபட வாய்ப்பளிக்கவே ஐந்துவருட அபிவிருத்தித் திட்டத்தில் விவசாயத்துக்கு முக்கிய இடமளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அளவையிலுள்ள பரகணவில் நடைபெற்றபரிசளிப்பு விழாவொன்றில் பங்குபற்றியவிவசாயஉணவு அமைச்சர் திரு. எம். டி. பண்டா பேசுகையில் குறிப்பிட்டார்.

# இலங்கை ஹாக்கி வீரர் பாங்கொக் போகின்றனர்!

## டிசம்பரில் நடக்கும் போட்டியில் கலந்துகொள்வர்

கொழும்பு, ஞாயிறு பாங்கொக்கில் டிசம்பர் மாதத்தில் நடைபெறவிருக்கும் ஆசிய விளையாட்டுக்களில் கலந்து கொள்வதற்கு 18 வீரர்களையும், 3 உத்தியோகத்தர்களையும் அனுப்புவதென இலங்கை ஹாக்கி சம்மேளனத்தின் சபை நேற்று முன்தினம் முடிவு செய்துள்ளது.

ஜவர்ஹர்லால் நேரு ஹாக்கி கிண்ணப் போட்டிக்கும் வீரர்களை இந்தியாவுக்கு அனுப்புவதெனவும் சம்மேளனத்தின் சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

பாங்கொக்குக்கு உத்தியோகத்தர்களாகச் செல்லும் மூவர்விபரம்வருமாறு: வால்டர் ஜெயசூரியா (மனேஜர்), கே. ரி. வீரசிங்கா (பயிற்சியாளர்) எல். கெய்சர் (உதவிமனேஜர்.)

பாங்கொக்குக்குச்செல்லும் ஹாக்கி வீரர்கள் வருமாறு: பிரெடிவயிற் (காப்டன்), ஜே. தர்மராசா (கோல்கீப்பர்), டி. டி ஆபசேகரா (உதவிகாப்டன்), றிச்சர்ட் கெயின், ஏ. மக்லெண்டர், ஸ்ரான்லி பெர்னாண்டோ, ஜி. எச். ரூபசிங்கா, எப். அஸீஸ், டெரிக்காவே, எம் சருக், ராஜா ஜெயசூரியா எம். ஐ ஜிமார், பி. செல்வராஜ், ஆா. விஜயகுன், சி. கொட்டின்கடுவ, ஹேமா பெர்னாண்டோ, ரோய் வான்டுவிஸ்ட், எஸ். எட்டி பொல.

## மந்திரி சகளா குணமடைகிறார்

பம்பாய், செப். 18 பம்பாயிலுள்ள தனிப்பட்ட ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றுவரும் இந்திய கல்விமந்திரி ஸ்ரீ சகளாகுணமடைந்து வருவதாக அறிவிக்கப்பட்டது.

ஸ்ரீ சகளாவுக்கு மார்புவலி ஏற்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். இன்னும் யாருமே அவரைப்பார்க்க அனுமதிக்கப்படவில்லை.

## பாரதத்தில் வர்த்தக ஒலிபரப்பு?

புதுடில்லி, செப். 17 பாரதத்தில் வர்த்தக ஒலிபரப்பு சேவையை ஆரம்பிக்க அரசாங்கம் ஆலோசனை செய்துவருகிறது. உள்ளூர் உற்பத்தி பொருள்களுக்கு ஊக்கமளிக்குமுகமாகவே இவ்வித சேவை ஆரம்பிக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரசாங்க அதிபர் இடமாற்றம்

வவுனியா, சனி வவுனியா அரசாங்க அதிபர் திரு. டி. எம். ரி. டி தஸநாயக்கா அடுத்தமாதம் தொடக்கம் குருனாகலை கச்சேரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.



ராலே

உள் வில்லு மெத்தைகள்

மிகவும் உயர்தரமானது!

உங்கள் சௌகரியத்துக்கு ஏற்றது!

பலவிதமான வர்ணங்களில்



சோபா மெத்தைகள்



முழு விவரங்களுக்கும் தயவுசெய்து எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்

த பர்மா ரீக் ரேடிங் கம்பனி லிமிட்.,
62, புளுமெண்டால் ரோட்,
கொழும்பு-13.
போன்: 2233
2234


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனுமீது அணுகுண்டுவீச திட்டமிட்டோம்

## கோரியா யுத்த நடவடிக்கைபற்றி ஐஸனேவர் வெளியிட்ட தகவல்

வாஷிங்டன், செப். 18

கொரியா யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதில் கம்யூனிஸ்ட் சீனு தொடர்ந்து முட்டுக்கட்டையாகவிருந்தால் சீனுவின்மீது அணுகுண்டை வீசுவதற்கும் அமெரிக்கா திட்டமிட்டிருந்த விபரத்தை முன்னுள் அமெரிக்க ஜனுதிபதி ஜெனரல் ஐஸனேவர் இன்று டெலிவிஷனுக்கு அளித்த பேட்டியொன்றில் வெளியிட்டார்.

"கொரியா யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர நாம் விரும்பினேம். சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கும் விருப்பம் தெரிவித்திருந்தோம். ஆனல் கம்யூனிஸ்ட் சீனு திரிப்புத் தெரிவித்திருந்த பொழுதிலும் இறுதியில் இணங்கிவிட்டது. சீனு தொடர்ந்து தனது பிடிவாதப்போக்கை கடைப்பிடித்திருந்தால் சீனுவின் மீது அமெரிக்கா நிச்சயமாக அணுகுண்டு வீசியிருக்கும். அணுகுண்டுகளை சீனுவின் இராணுவ நிலையங்களின் மீது மட்டும் வீசவே திட்டமிட்டிருந்தோம்" என்றும் முன்னுள் ஜனுதிபதி ஐஸனேவர் இப்பேட்டியில் தெரிவித்தார்.

## 'எல்லோர் ஆதரவும் கிடைக்குங்காலம் வரும்'

### அச்சுவேலிக் கூட்டத்தில் திரு. வி. என். நவரத்தினம்

யாழ்ப்பாணம், திங்கள்

'உங்களின் சத்தியாக்கிரக இயக்கத்தில் கூடிய சீக்கிரம் நாங்களும் கலந்துகொள்ளும் சூழ்நிலைவரும் என்த் திடமாக நம்புகின்றேன்'.

அச்சுவேலியில் நடைபெற்ற கூட்டத்தில் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:- தீண்டாமையை ஒழிக்க தமிழரசுக் கட்சி பல முயற்சிகளை எடுத்துவந்திருக்கிறது. சிலவற்றில் முன்னேற்றமும் கண்டிருக்கிறது.

சென்ற செயற்குழு கூட்டத்தில், உயர்வு, தாழ்வை ஒழிக்க, ஆலோசனைகள் தெரிவிக்க ஒரு உபகுழு தெரிவு செய்யப்பட்டது. அக்குழுவில் என்னைச் செயலாளராகத் தெரிந்திருக்கின்றனர். உங்களின் கோரிக்கைகளை, தீர்மானங்களை நான் எமது கட்சிக்கு எடுத்துக் கூறுவேன்.

உங்கள் கோரிக்கைகளை எந்த அரசியல் கட்சியும் எதிர்க்கவில்லை, கொள்கையளவில் ஏற்றுள்ளார்கள். மிக விரைவில் எல்லாக்கட்சிகளும், உங்கள் இயக்கத்திற்கு ஆதரவு வழங்குவார்கள் என நம்புகின்றேன்.

இந்த இயக்கம் புனிதமானது. புனிதமான ஆயுதத்தைப் பாவித்து போராட்டம் நடத்த சத்தியாக்கிரகம், ஆத்மீகம், ஆகியவை உங்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தியதைவிட்டு மகிழ்ச்சியடைகிறேன். இந்த இயக்கத்திற்கு எங்கள்கட்சி மாருனது என்ற கருத்து சிலர் மனதில் இருக்கின்றது. எங்கள் கட்சி உபதலைவர் இந்த இயக்கத்தில் முக்கிய பங்கு எடுத்திருக்கின்ருர். உங்கள் போராட்டத்திற்கு பூரண ஆதரவையும்ஒத்துழைப்பையும் வழங்குவோம். நேரத்திற்கு ஏற்றபடி திட்டங்களை தயாரிக்கும் போராட்டகுழுவிற்கு நீங்கள் உதவியாக இருக்கவேண்டும்.

எந்த லட்சியத்திற்காக நீங்கள் இங்கு கூடியிருக்கின்றீர்களோ, அந்த இலட்சியத்திற்காக இதுவரை காலம் இயன்றளவு இயங்கிவந்த தமிழரசுக்கட்சிப் பிரதிநிதியாக, திரு. செல்வநாயகத்தின் அனுமதியுடனும், உத்தரவுடனும், இக்கூட்டத்தில் கலந்துகொள்ள வந்தி

(5-ம்பக்கம் பார்க்க)

## அமைச்சர் சபை....

(1-ம் பக்கத் தொடர்ச்சி

இடமாற்றம்சம்பந்தமாக திரு. துரையப்பா சுகாதார அமைச்சரிடம் தொடர்பு கொண்டு தமது மனைவியார் மாநகரசபையில் [illegible] யாற்றவில்லை என்றும் எனவே [illegible] மேயராக இருக்கும் மாநகரசபையில் தமது மனைவியார் கடமையாற்றுகிறார் என்ற பேச்சுக்கே இடமில்லையென்பதையும் தெரிவித்தே இடமாற்றத்தை ரத்துசெய்ய வேண்டியிருந்தது. திருமதி துரையப்பா இப்போதும் யாழ்ப்பாண பாடசாலைகளுக்கான வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றி வருகிருர்.

ஒரு அமைச்சர் மற்றொரு அமைச்சருக்கு எழுதி விசாரணை எதுவுமின்றி ஒரு உத்தியோகத்தரை தந்தி மூலம் இடமாற்றம்செய்யச் செய்வது நியாயமில்லாத காரியம். திருமதி துரையப்பா மாநகரசபையில் கடமையாற்றுகையில் அவரது கணவர் அந்த மாநகரசபையின் மேயராக இருப்பதில் என்ன தவறு?

பிரதம நீதியரசர் திரு. சன்சோனி: இப்போதும் திருமதி துரையப்பா யாழ்ப்பாணத்தில் தான் கடமையாற்றுகிருரா?

வழக்கறிஞர்: ஆம், பிரபு. அவரது கணவர் அவரது இடமாற்றத்தை நிறுத்துவதற்காக சுகாதார அமைச்சரைக் காணவேண்டியிருந்தது.

உள்ளூராட்சி அமைச்சரை அவரது காரியாலயத்தில் மேயர் சந்தித்தபோது இந்த இடமாற்றம் பற்றி ஒரு வார்த்தையும் அமைச்சர் கூறவில்லை. தாம் மாநகரசபையைக் கலைப்பது பற்றியும் அவர் அப்போது மறந்திருந்தார். விசாரணைகள் பற்றி ஒருவார்த்தை கூட அவர் கூறவில்லை. இவையெல்லாம் வேண்டுமென்றே கஷ்டத்தைக் கொடுக்கும் நோக்க அடிப்படையில் திட்டமிடப்பட்டவை.

அமைச்சர் திருச்செல்வம் மாநகரசபை கலைக்கப்பட வேண்டுமென தம்மிடம் நேராகவும் எழுத்து மூலமாகவும் கோரப்பட்டதாகத் தமது சத்தியக் கடதாசியில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விதம் கோரியவர்கள் யார்? நல்லூர் எம்.பி. டாக்டர் நாகநாதன், தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த மாநகரசபை அங்கத்தவர்கள், தமிழ் காங்கிரஸ் சார்பு யதிசி வழக்கறிஞர் சமிகரப்பிள்ளை, மற்றும் திரு. திருச்செல்வம் முக்கிய அங்கம் வகிக்கும் தமிழரசுக் [illegible] சார்பானவர்கள் ஆகியோரே இவ்விதம் கோரியவர்கள்.

மாநகரசபையைக் கலைக்கு முன்னர் அமைச்சர் இது சம்பந்தமாக விசாரணை நடத்தியிருக்க வேண்டும். தமது கட்சி அங்கத்தவர் ஒருவர் மேயராகத் தெரிவு செய்யப்படவில்லை என்ற காரணத்தினுல் அவர் மாநகர சபையைக் கலைத்தார். அமைச்சரின் இச்செயல் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வதாக இருக்கிறது' இச்சந்தர்ப்பத்தில் அமைச்சரின் இவ்வித உத்தரவு செல்லுபடியாகாது' என உத்தரவு இடுமா என்று வழக்கறிஞர் நீதியரசரைக் கேட்டுக் கொண்டார்.

சொலிசிட்டர் ஜெனரல் தென்னக்கூன் அப்போது கூறியதாவது:

மாநகரசபை தனது கடமைகளை சீராகச் செய்ய முடியாத நிலையிலிருந்ததாக அமைச்சர் அபிப்பிராயம் கொண்டிருந்தார். அமைச்சரின் முடிவு பற்றி வாதிக்கும் அதிகாரம் கோர்ட்டுக்கு இல்லை. அமைச்சரின் உத்தரவை செல்லுபடியாகாதென தீர்ப்பு வழங்கும் உரிமை கோர்ட்டுக்கு இருந்தால் சீரற்ற நிர்வாக முறையில் இயங்கும் சபைகளை அமைச்சர் பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய நிலை ஏற்படும். இது விஷயத்தில் பார்லிமெண்டுக்கோ அல்லது கோர்ட்டுக்கு பதிலளிக்கும் பொறுப்புடையவரல்ல அமைச்சர்.

விசாரணை தொடர்ந்து நடைபெறும்.

## 2 மாத அவகாசம்...

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

கொண்டனர். வாலிபத் தொண்டர்களும் மண்டபத்திற்கு வெளியில் திரண்டு நின்றனர்.

தமிழரசுக்கட்சி சார்பில் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினமும், தமிழ்க்காங்கிரஸ் சார்பில் நிர்வாகக் காரியதரிசி திரு. வீ. சங்கரப்பிள்ளையும், இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தைச் சேர்ந்த வி. ஏ. கந்தசாமி, நெல்லியடி பட்டினசபைத்தலைவர் திரு. பொன்னையா, திரு. டானியல், திரு. டொமினிக்ஜீவா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

தமிழரசுக் கட்சித்தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், வலிவடக்குக் காரியாதிகாரி திரு. முருகேசம்பிள்ளை, பூநகரி காரியாதிகாரி திரு. வி. கந்தையா, முதலியார் செ. சின்னத்தம்பி, வி. பொன்னம்பலம் ஆகியோர் கடிதம் அனுப்பியிருந்தனர்.

பாஸ்கரன் தியேட்டரின் முன்னுல் ஒரு லொறியிலும், ஒரு ஜீப்பிலும் சுமார் 25 பொலிசார் காலை முதல் காணப்பட்டனர்.

## கோரிக்கைகள்

யாழ்ப்பாணம், திங்கள்

○ மாவட்ட சபையில் சிறுபான்மைத்தமிழர்களுக்குப் பிரதிநிதித்துவம் கிடைக்க வழிசெய்யவேண்டும்.

○ கோவில்கள் அனைத்தும் சிறுபான்மைத் தமிழருக்குத்திறந்து விடப்பட வேண்டும்.

○ தேநீர்ச்சாலைகள், சலவைச்சாலைகள், சவரச்சாலைகளின் சிறுபான்மை தமிழருக்குப் பாரபட்சம் காட்டக் கூடாது.

○ வாசிகசாலைகள், பொதுக்கிணறுகள், நூல் நிலையங்களில் சிறுபான்மை தமிழருக்குச் சமத்துவம் இருக்க வேண்டும்.

○ கல்விச்சாலைகளில் விகிதாசாரப்படி, சிறுபான்மைத் தமிழருக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்பட வேண்டும்.

○ அரசாங்க உத்தியோக நியமனம் சாதி அடிப்படையில் இருக்கக்கூடாது.

மேற்கண்ட ஆறு கோரிக்கைகளை சிறுபான்மைத்தமிழர் ஐக்கிய முன்னணி சார்பில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் வெளியிடப்பட்டது.

தலைவர் திரு. வைரமுத்து இக்கோரிக்கைகள் பற்றி கூறியதாவது: இக்குறைந்த சிறுபான்மைத் தமிழர் மகாசபை, திருவள்ளுவர் மகாசபை, மக்கள் முன்னேற்ற மன்றம் ஆகியவை

(5-ம் பக்கம் பார்க்க)

## அரசாங்கத்தின்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சனிக்கிழமை பார்லிமெண்டில் எதிர்க்கட்சியினர் கிளப்பிய பிரச்னைக்கு பிரதமர் பதிலளிக்க எழுந்த போதெல்லாம் எதிர்க்கட்சியினர் தடுத்து அவரைப் பேசவிடாமல் செய்தனர். பிரதமரைப்பேச விடுமாறு உப சபாநாயர் கோரியிருந்தும்கூட எதிர்க் கட்சியினர் அதனை ஏற்க மறுத்துவிட்டனர். ஆனல் இன்று அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கை, நேற்றுஎதிர்க்கட்சியினர் நடவடிக்கைகளுக்கு பழிக்குப்பழிவாங்குவதாக அமைந்திருந்தது.

இன்று ஒத்திவைப்புப் பிரேரணையைத் தாக்கல் செய்வதற்கு எதிர்க்கட்சியினர் முயற்சித்தபொழுது சபையில்கோரம் இல்லை என்றுதெரிவிக்கப்பட்டது, இதனைத்தொடர்ந்துகோரத்துக்கான மணி அடிக்கப்பட்டது. ஆனல் அரசாங்க எம்.பிக்கள்பலரும் அலட்சியமாக சபைக்கூட்டத்துக்கு வராமல்வெளியே நின்று கொண்டிருந்தனர். அப்பொழுது எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் சிலருக்குமிடையே வாக்குவாதம் நிகழ்ந்தது.

"நேற்றுநான்பேச எழுந்த போதுஎப்படித் தடுத்தீர்கள் என்பது நினைவிருக்கிறதல்லவா தானே என்று பிரதமர் கேட்டார்."

'கோரம்இல்லை. அதுதான் சபையும் கூட்டப்படவில்லை உங்களைப்போன்று எங்களுக்கும் சிலதந்திரநடவடிக்கைகள்தெரியும் என்றும் பிரதமர் குறிப்பிட்டிருந்தார்'

## குழாய்கள் பற்றி புகார்

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் கிராமசபையால் செயற்படுத்தப்படும் பொன்னலை தண்ணீர் விநியோகத்துக்குப் பாவிக்கப்படும் இரண்டு குழாய்கள் முறிக்கப்பட்டுள்ளதாக சுழிபுரம் கிராம சபை அலுவலகத்திலும், சங்கானைப் பொலிஸ் நிலையத்திலும் புகார் செய்யப்பட்டுள்ளது.

## அபேட்சகர்கள்

கொழும்பு, சனி

பலாங்கொடைத் தொகுதிக்கு ஜனுப் எம். எல்.எம். அபுசாலியும், பண்டாரவளைத் தொகுதிக்கு திரு. சிரில் மத்தியூவும், பெந்தர-எல்பிட்டியா தொகுதிக்கு கொலின் சமரநாயக்காவும் யு. என். பி. அபேட்சகர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

## இன்று

யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்திருக்கும் யோகி கண்ணையாசுவாமிகள்இன்று பிற்பகல் யாழ்ப்பாணம் 37 டொமினிக்வீதியில் திவ்ய ஜீவனசங்கத்தாரின் ஆதரவில் நடைபெறும் பிரார்த்தனைக்கூட்டமொன்றில் கலந்துகொள்வார்.

## பிரயாணியின் பரிதாப மரணம்

மாவிட்டபுரம், ஞாயிறு

நேற்றிரவு யாழ்ப்பாணத்திலிருந்து இளவாலையூடாக பஸ்ஸில் பிரயாணம்செய்த வேலுப்பிள்ளை தர்மலிங்கம் என்னும் இளைஞன் பஸ்நிறுத்தப்படுமுன்னர் இறங்கியதன் விளைவாக சில்லுக்குள் அகப்பட்டுமரணமான சம்பவம்சித்திரமேனியில் நடைபெற்றது.

இதுசம்பந்தமாக சங்கானைப்பொலிசார் பஸ் சாரதி காசிப்பிள்ளை பொன்னுத்துரை கண்டக்டர் பரராஜசிங்கம் ஆகியோரைப்பாதுகாப்பில் வைத்துள்ளனர். பஸ் காங்கேசன்துறையில் பொலிஸ் பாதுகாப்பிலுள்ளது. இன்ஸ்பெக்டர் புலன்விசாரணைசெய்கிறார்.

## மரண அறிவித்தல்

### பொன்னம்மா

பண்டாரவளை பிரபல வர்த்தகரும் வரகல எஸ்டேட் உரிமையாளருமான க. கோபாலபிள்ளை, பண்டாரவளை ஊவா டிக்கராவ எஸ்டேட் உரிமையாளர் க. அருணசலம், கரம்பன் கிழக்கைச் சேர்ந்த க. இராமசாமி, யாழ்ப்பாணம் ஹோம் நீட்ஸ் உரிமையாளரும் கொழும்பு பிரபல வர்த்தகர் க. இரத்தினம், சுருவில் பண்டிதர் க. சிவசம்பு, வேலணை மேற்கைச் சேர்ந்த க. தியாகராசா ஆகியோரின் தாயாரும், காலஞ் சென்ற சி. கப்பையாவின் மனைவியுமான பொன்னம்மா தனது 97-வது வயதில் சுருவில் "இரத்தினேச்சுரத்தில்" சிவபதமடைந்தார். அன்னரின் பூதவுடல் ஈமைக் கிரியைகளுக்காக இன்று (19-9-66) திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் சுருவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை நண்பர்களும் உறவினர்களும் ஏற்றுக் கொள்ளவும். 100

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org